# காலை முரசு

பக்கங்கள் 28

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 02 ஞாயிற்றுக்கிழமை 19.10.2025 | அதிர்வு 80


## ஓட்டோ விபத்தில் சிறுவன் மரணம்

### மட்டக்களப்பில் சோகம்

ஓட்டோ விபத்தில் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

04

### இலட்சக்கணக்கான உயிர்களைக் கொடுத்து எடுத்த

# மாகாண சபை முறைமை தமிழர் வசமாக வேண்டும்

## தமிழ் மக்கள் பேரவையின் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரமே செயற்படுகின்றோம் என்றும் சுரேஷ் தெரிவிப்பு



(கி.வசந்தன்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்த வரையில் தமிழ் மக்கள் இலட்சக்கணக்கான உயிர்களைக் கொடுத்து எடுத்த மாகாண சபை முறைமை அவர்கள் வசம் செல்ல வேண்டும் எனவும், தமிழ்த் தேசியப் பேரவையின் புரிந்துணர்வு ஒப்பந்தின் பிரகாரமே செயற்படுகின்றோம் எனவும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

02

# ஒன்றிணைந்து பயணிப்பது குறித்த சந்திப்பில் பங்கேற்பது தொடர்பில் கட்சியே தீர்மானிக்கும்!

## தமிழரசின் பொதுச்செயலாளர் சுமந்திரன் அறிவிப்பு

"மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு அரசுக்கு எவ்வாறு அழுத்தம் பிரயோகிப்பது என்பது பற்றி ஆராயும் நோக்கில் தமிழ்த் தரப்புக்களால் ஏற்பாடு செய்யப்படும் சந்திப்புக்களில் பங்கேற்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். ஆனால் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஒன்றிணைந்து பயணிப்பது குறித்துக் கலந்துரையாடும் நோக்கிலான சந்திப்பு எனில் அதில் பங்கேற்பது குறித்து கட்சியே தீர்மானிக்கும்."

02





இந்த நாட்டில் உள்ள பொலிஸார் ஒன்றும் உத்தமர்கள் அல்லர் என்பதில் எமக்கும் மாற்றுக் கருத்து இல்லை. அல்லது பொலிஸாருக்கு வக்காலத்து வாங்குவதும் எமது நோக்கம் அல்ல.

அதற்காக 'தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் ஆக முடியாது.' பொலிஸாரைத் தம்மிஷ்டப்படி எல்லோரும் கட்டளையிட்டு பணிந்து நடக்க உத்தரவிட முடியாது. அப்படியானால் பொலிஸ்மா அதிபர், சிவில் பாதுகாப்பு அமைச்சர், பிரதமர், ஜனாதிபதி எல்லோரும் எதற்கு என்ற கேள்வி எழும்.

நாட்டில் ஒரு பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியைத் தமக்கு முன்னால் நிற்க வைத்து, மேலதிகாரி போல

03




# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மாகாண சபை...

வவுனியாவில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உயர்மட்டக் கலந்துரையாடலுக்குப் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் கட்டமைப்பை வலுப்படுத்துவது தொடர்பாகவும், எமது எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும், கிராம மட்டங்களில் கட்சிக் கட்டமைப்பை விஸ்தரிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடியிருக்கின்றோம். மாவட்ட மட்டக் குழுக்களை அமைத்து அதன் ஊடாக இதனை முன்னகர்த்துவது எனத் தீர்மானித்துள்ளோம்.

அதேபோல் வடக்கு, கிழக்கில் உள்ள எமது உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட மட்ட உறுப்பினர்களையும் இணைத்த கூட்டங்களை விரைவாக நடத்துவது எனவும் தீர்மானித்துள்ளோம்.

அரசியல் நிலைவரங்கள் தொடர்பாகப் பார்கின்றபோது மாகாண சபை தேர்தல் தொடர்பாக அரசு பல்வேறுபட்ட முரணான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றது. சில அமைச்சர்கள் விரைவாக மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என்று கூறினாலும், பிரதம மந்திரி மற்றும் சில அமைச்சர்கள் மாகாண சபை தொடர்பான எல்லைகள் வகுக்கப்பட்ட பின்னர்தான் தேர்தல் எனக் கூறுகின்றனர்.

ஆகவே, தமிழ் மக்கள் மத்தியில் இது தொடர்பில் அச்ச உணர்வு காணப்படுகின்றது. இந்தத் தேர்தல் நடக்குமா, நடக்காதா என்ற நிலை உள்ளது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைப் பொறுத்த வரை மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். நவம்பர் மாதம் வரவிருக்கும் வரவு - செலவுத் திட்டத்தின் பிற்பாடு இந்தத் தேர்தலை நடத்துவதற்கன ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும். அதற்கான சட்ட திருத்தங்கள் ஏதாவது கொண்டு வரப்பட வேண்டுமாக இருந்தால் அதனைக் கொண்டு வந்து தேர்தல் என்பது உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்பது தமிழ் மக்களின் கோரிக்கை.

மாகாண சபை முறைமை கூட தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாகத் தான் கொண்டு வரப்பட்டது. ஆனால், அதை ஒருபுறம் தள்ளிவிட்டு அரசுகள் செயற்படுகின்றன.

கடந்த 7 வருடங்களாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவில்லை. தமிழ் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அந்தத் தேர்தல் நடைபெற வேண்டும்.

இலங்கையில் இருக்கக் கூடிய ஜனநாயகக் கட்டமைப்புக்களை காப்பாற்றுவதாக இருந்தால் அரசு இந்தத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும். அவர்கள் எதிர்த் ரப்பில் இருக்கும் போது அதற்காக குரல் கொடுத்தார்கள். தற்போது மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம் அரசு எனக் கூறினாலும் எவ்வாளவு விரைவாக நடத்தப்படும் என்ற கேள்வி எழுகின்றது. குறைந்த பட்சம் அடுத்த வருட ஆரம்பத்தில் என்றாலும் இந்தத் தேர்தலை நடத்த வேண்டும்.

தமிழ் மக்கள் ஐக்கியபட வேண்டும் என்பது நீண்டகால கோரிக்கையாக உள்ளது. நாங்கள் ஐந்து அமைப்புக்களின் கூட்டாக இருக்கின்றோம். ஏனைய தரப்புக்களையும் இணைத்துச் செல்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

தற்போதைய சூழ் நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்த வரையில் தமிழ் மக்கள் இலட்சக்கணக்கான உயிர்களைக் கொடுத்து எடுத்த மாகாண சபை முறைமை அவர்கள் வசம் செல்ல வேண்டும். அவர்கள் தம்மைத் தாமே ஆளக் கூடிய சூழல் ஏற்பட வேண்டும். ஆகவே எல்லோரும் இணைந்து செயற்பட வேண்டும்.

கடந்த காலத்தைப் போல் நாம் கூட்டாக இயங்கியிருந்தால் அதிக வாக்குப் பலத்தைப் பெற்றிருந்நப்போம். கடந்த நாடாளுன்றத் தேர்தலில் நாம் அந்தத் தவறை விட்டோம். அவ்வாறு இல்லாமல் மாகாண சபைத் தேர்தலில் இணைந்து செயற்பட வேண்டும். அந்த முடிவையும் நாம் எடுத்துள்ளோம்.

தமிழ்த் தேசிப் பேரவையில் இருந்து நாங்கள் விலத்திச் சென்றதாகக் கஜேந்திரகுமார் சொல்லவில்லை. விலத்திச் செல்வதாகத்தான் கருதுவதாகவே அவர் சொல்லியிருக்கின்றார். நாங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரமே செயற்பட்டு வருகின்றோம். நாங்கள் அந்த ஒப்பந்தத்துக்கு முரணாகக எதுவும் செய்யவில்லை. உத்தியோக பூர்வமாக விலத்தியதாக அவர் அறிவிக்கவில்லை. நாங்களும் விலத்தியதாக எங்கும் சொல்லவில்லை. எனவே இது தொடர்பாக அவர்களுடன் பேசுவோம்.

அத்துடன், 13 ஆவது திருத்தமே இலங்கை அரசியல் சாசனத்தில் இருக்கக்கூடிய ஒரு விடயம். அவ்வாறான விடயம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்பது எங்களது கோரிக்கை. நாம் மட்டுமல்ல தமிழரசுக் கட்சி உட்பட பல தரப்புக்கள் அந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சார்ந்தவர்கள் கூட அவ்வாறான ஒரு தேர்தல் வந்தால் அதில் போட்டியிடுவோம் என்று கூறுகின்றார்கள். தேர்தலை நடத்துமாறு கோரிக்கை வைப்பதும் பிழையானது இல்லை எனவும் அவர்கள் கூறுகின்றார்கள்.

எனவே, அவர்களும்தான் இந்தக் கோரிக்கையை முன்வைத்துக் கொண்டிருக்கின்றர்கள் என்பது எனது கருத்து. அவர்கள் இதனைப் பிழையாக விளங்கியிருந்தால் இது தொடர்பாக அவர்களுடன் நாங்கள் பேசுவோம்." - என்றார்.

## ஒன்றிணைந்து பயணிப்பது...

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நீண்டகாலம் நடத்தப்படாமல் இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வரும் மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், அதற்குரிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் நோக்கிலும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு கடந்த புதன் கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், சமத்துவக் கட்சியின் தலைவர் சந்திரகுமார் மற்றும் முன்னாள் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்குரிய அழுத்தங்களைப் பிரயோகிப்பதுடன் அந்தத் தேர்தலை இலக்காகக்கொண்டு தமிழ்த் தரப்புக்கள் ஒன்றிணைந்து ஒற்றுமையுடன் பயணிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில் பங்கேற்பதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் கட்சியின் சார்பில் எவரும் பங்கேற்றிருக்கவில்லை. அதனையடுத்து தனிப்பட்ட சில காரணங்களால் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை எனவும், இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் காலங்களில் நடத்தப்படும் சந்திப்புக்களில் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் கலந்துகொள்வர் என எதிர்பார்ப்பதாகவும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.


இவ்வாறானதொரு பின்னணியில் அந்தக் கூட்டத்தில் பங்கேற்காமைக்கான காரணம் குறித்து சுமந்திரனிடம் வினவியபோது, அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்குத் தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டது எனவும், இருப்பினும் அன்றைய தினம் கொழும்பில் இருக்க வேண்டியிருந்த காரணத்தால் அதில் பங்கேற்க முடியவில்லை எனவும் பதிலளித்தார்.

அவ்வாறெனில் இந்த விடயம் தொடர்பில் எதிர்வரும் காலங்களில் நடத்தப்படும் கூட்டங்களில் கலந்துகொள்வீர்களா எனக் கேள்வி எழுப்பியபோது, அதற்குச் சுமந்திரன் பின்வருமாறு பதிலளித்தார்.

"மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு அரசுக்கு எவ்வாறு அழுத்தம் பிரயோகிப்பது, அதனை முன்னிறுத்தி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது குறித்து நாம் தமிழ்த் தரப்புக்களுடன் மாத்திரமன்றி கொழும்பை மையமாகக்கொண்டு இயங்கும் அமைப்புக்கள் உள்ளடங்கலாகப் பல்வேறு தரப்பினருடன் ஏற்கனவே கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றோம். அதற்கமைய தமிழ்த் தரப்புக்களால் இந்த நோக்கத்துடன் ஒழுங்கு செய்யப்படும் கலந்துரையாடல்களில் பங்கேற்போம். இருப்பினும் அவை எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஒன்றிணைந்து பயணிப்பது குறித்து கலந்துரையாடும் நோக்கிலான சந்திப்புக்களாக இருந்தால், அவற்றில் பங்கேற்பது தொடர்பில் கட்சியுடன் கலந்துரையாடியதன் பின்னரே தீர்மானிக்க முடியும்." - என்றார்.

# சூடு காட்டினால் அழியும் மை கொண்ட பேனாவின் மூலமாக போலி அனுமதிப் பத்திரம் தயாரித்து மணல் கடத்தியவர்கள்

## வவுணதீவில் அதிகாரிகளின் சோதனையில் சிக்கினர்





**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு வவுணதீவில், கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையத்தில் இருந்து நுகர்வோர் வரை எடுத்துச் செல்வதற்கான மணல் போக்குவரத்துக்கான அனுமதிப் பத்திர விண்ணப்பத்தை தீயைக் காட்டினால் அழியும் மை கொண்ட பேனாவினால் பூர்த்தி செய்து டிராக்டரில் மணல் கடத்தலில் ஈடுபட்ட இருவரை கொழும்பில் இருந்து வந்த புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் சோதனை பிரிவினர் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் சோதனை பிரிவுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் நேற்று முன்தினம் பகல் பணியகத்தின் கொழும்பில் இருந்து வந்த சோதனை பிரிவினர் வவுணதீவு பிரதேசத்தில் வீதியால் மணல் ஏற்றிச் சென்ற டிராக்டரை நிறுத்தி அனுமதிப்பத்திரத்தை சோதனை செய்தனர்.

இதன் போது பேனாவினால் நிரப்பப் பட்ட அந்த அனுமதி விண்ணப்ப படிவத்திற்கு அருகில் தீயை காட்டி சோதனைசெய்தபோதுஅதுஅழியும்மையினால் கொண்ட பேனாவால் நிரப்பப் பட்டு ஒரு டிராக்டருக்கு 6 தடவைகள் அனுமதி பத்திரத்தை போலியாக பூர்த்தி செய்து சட்டவிரோதமாக மண் அகழ்ந்து அதனை கடத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டு வந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அதனையடுத்து சம்பந்தப்பட்ட நபர் கைது செய்ச்ப்பட்டார்.

அதேவேளை வவுணதீவு பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் மணல் ஏற்றி சென்ற மற்றொரு டிராக்டரை நிறுத்தி சோதனையிட்ட போது, சமர்ப்பிக்கப்பட்டது போலியாக தயாரித்த அனுமதிப்பத்திரம் எனக் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அந்த நபரும் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரையும் இரு டிராக்டர்களையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இதனையடுத்து கைது செய்யப் பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக வவுணதீவு பொலிஸெ தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

அமர்ந்திருந்து கேள்வி கேட்கும் அதிகாரமோ, பணிப்புரை அல்லது உத்தரவிடும் அதிகாரமோ நாம் அறிந்தவரை எந்த நாடாளுமன்ற உறுப்பினருக்கும் எந்தச் சட்டத்தின் கீழும் வழங்கப்படவில்லை..

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸாருக்கு வழங்கும் தகவல் மற்றும் முறைப்பாட்டு விடயங்கள் குற்றம் இழைத்த பக்கத்துக்கு 'லீக்' ஆகின்றது எனில் அது கட்டாயம் தடுக்கப்பட வேண்டும். ஆனால், அதற்காக அனைவரும் அதிகாரத்தை கையில் எடுக்க அனுமதித்தால் நாளை சகல நிர்வாகமும் பாழாகிப் போகும்.

நாடாளுமன்ற உறுப்பினருக்கே அதிகாரம் இல்லாதபோது அவரின் அல்லக்கையை உள்ளே விட்டதே தவறு. தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் ஒரு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கே இந்த நிலை என்றால் சாதாரண நிர்வாக அதிகாரிகளின் நிலை எப்படி இருக்கும்?

ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டரை – பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியையே நாடாளுமன்ற உறுப்பினர், நிறுத்தி வைத்து பணிப்புரை விடுக்கும் அவலமே காணப்படுகின்றது.

இதுதான் அநுர குமார திஸநாயக்கா அரச நிர்வாகத்தில் தாம் கொண்டு வரப் போகின்றார் என ஆரவாரம் பண்ணிய மாற்றமா?

என்ன நடந்தது என்பதை நான் விவரிக்கப் போவதில்லை. சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் முக நூல் பதிவை அப்படியே தந்துள்ளேன். வாசகர்களே வாசித்து முடிவு செய்து கொள்ளட்டும்.

Rajeevan Jeyachandramoorthy
4h

கோப்பாய் பிரதேசத்தில் நடைபெறும் குற்றச் செயல்கள் தொடர்பாக பொலிஸாருக்கு தெரிவிக்கும் போது அந்தத் தகவல்கள் சந்தேக நபர்களுக்கு சொல்லப்படுகிறது. இது தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்ததன் காரணமாக குறித்த பொலிஸ் நிலையத்துக்கு சென்று விசாரித்தேன்.
பிரதேசத்தில் நடைபெறும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த வேண்டிய பொலிசாரே சந்தேக நபர்களுக்கு தகவல்களை வழங்குவதால் பொதுமக்கள் பொலிஸாரிடம் செல்ல அச்சப்படும் சூழல் காணப்படுகிறது.
இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் எதிர்காலத்தில் இது போன்ற விடயங்கள் நடைபெறக் கூடாது எனவும் பணிப்புரை வழங்கினேன்.
என்னுடன் கோப்பாய் பிரதேச அமைப்பாளர் தோழர் விவேக், பிரதேச சபை உறுப்பினர் கஜீபன் தோழர் மற்றும் ஏனைய பிரதேச சபை உறுப்பினர்கள் வருகை தந்தனர்.






# வீதியில் பயணித்த வயோதிபர் கார் மோதி பரிதாப உயிரிழப்பு!

கார் ஒன்று வீதியில் பயணித்த வயோதிபர் மீது மோதியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

பதுளை, மஹியங்கனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தலங்கமுவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த வயோதிபர் மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

திவுலபெலெஸ்ஸ பகுதியைச் சேர்ந்த 85 வயதுடைய நபரே உயிரிழந்தவர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹியங்கனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# ஒரே நாள் அதிரடி வேட்டையில் 4 ஆயிரத்து 601 பேர் மாட்டினர்!

இலங்கையில் ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 4 ஆயிரத்து 601 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்பில் 24 பேரும், சந்தேகத்தின் பேரில் 654 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 303 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 141 பேரும், மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 11 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 11 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 451 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**ஓட்டோ விபத்தில்...**

இந்த விபத்து நேற்று சனிக்கிழமை மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி – காவத்தமுனை பகுதியில் வைத்து இடம்பெற்றுள்ளது.

ஓட்டோவில் சிறுவன் பயணித்துக் கொண்டிருக்கும் போது ஓட்டோ சாரதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிறிய ரக உழவு இயந்திரத்தைக் கடந்து செல்லும் போது ஓட்டோவில் இருந்த சிறுவன் சிறிய உழவு இயந்திரத்தில் தூக்கி வீசப்பட்டு உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் காவத்தமுனை பாடசாலை வீதியைச் சேர்ந்த ஒன்பது வயதுடைய சிறுவன் ஆவார்.

சிறுவனின் சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பொன்சேகாவை நம்பி அவருடன் கோட்டா கதைத்திருக்கக்கூடும்!

## குரல் பதிவை வெளியிடுமாறும் நாமல் வலியுறுத்து



முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா வசம் குரல் பதிவுக் காணொலிகள் இருந்தால் அதை அவர் வெளியிடட்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷக்கள் தொடர்பாக சரத் பொன்சேகா வெளியிட்டுள்ள கருத்துக்கள் மற்றும் காணொலி வெளியிடும் விவகாரம் என்பன தொடர்பில் ஊடகங்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

"சரத் பொன்சேகாவின் இயல்பு அது. முன்னரும் அவர் அப்படிதான். குரல் பதிவு இருந்தால் அதனை அவர் வெளியிடட்டும். அதற்குரிய உரிமை அவருக்கு உள்ளது. கோட்டாபய ராஜபக்ஷ, சரத் பொன்சேகாவுடன் நம்பி கதைத்திருக்கக்கூடும். ஆக அதை வெளியிட்டால் தற்போது சரத் பொன்சேகாவை நம்புபவர்களின் நிலை என்னவென்று சொல்வது?."
– என்றார்.

# அனுராதபுரம் வாகன விபத்தில் ஒருவர் பலி! மூவர் காயங்களுடன் வைத்தியசாலையில்!!




அனுராதபுரம், கெப்பித்திகொல்லேவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹநெட்டியாவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது என்று கெப்பித்திகொல்லேவ பொலிஸார் தெரிவித்தனர்.

கெப்பித்திகொல்லேவ நோக்கிப் பயணித்த கப் வாகனம் ஒன்று காருடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது காரின் சாரதியும், அதில் பயணித்த இருவரும், கப் வாகனத்தின் சாரதியும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் கார் சாரதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

எடவீரகொல்லேவ பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய நபரே உயிரிழந்தவர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கெப்பித்திகொல்லேவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# துப்பாக்கிகள், தோட்டாக்களுடன் அம்பாந்தோட்டையில் ஒருவர் கைது!

## போதைப்பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டவை என்று சந்தேகிக்கப்படும் லொறி, கப் வாகனமும் மீட்பு

துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களுடன் இளைஞர் ஒருவர் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை, /ஹங்கம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாமடல பகுதியில் மேற்படி இளைஞர் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹுங்கம – மாமடல பகுதியில் வசிக்கும் 38 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து ரி – 56 ரக துப்பாக்கி ஒன்று, ரி – 56 ரக துப்பாக்கிக்குரிய தோட்டாக்கள் 63, போர் 12 ரக துப்பாக்கிகள் 2, போர் 12 ரக துப்பாக்கிக்குரிய தோட்டாக்கள் 25 மற்றும் ரிவோல்வர் ரக துப்பாக்கிக்குரிய தோட்டாக்கள் 34 என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், போதைப்பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டது என்று சந்தேகிக்கப்படும் லொறி ஒன்றும் கப் வாகனமும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து கைப்பற்றப்பட்ட லொறி மற்றும் கப் வாகனம் மேலதிக விசாரணைகளுக்காக ஹுங்கம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹுங்கம பொலிஸார் மற்றும் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.



# தென்மராட்சியில் குரங்குகளை கட்டுப்படுத்த சனசமூக நிலையங்களுக்கு வாயுத்துப்பாக்கி!

## சாவகச்சேரி நகரசபையில் தீர்மானம்

(த.சுபேசன்)

தென்மராட்சியில் குரங்குத் தொல்லையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு வாயுத் துப்பாக்கிகள் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நகராட்சி மன்ற உபதவிசாளர் ஞா.கிஷோர் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மாதாந்த அமர்வில் முன்வைத்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –



குரங்குத் தொல்லையைக் கட்டுப்படுத்த நகராட்சி மன்ற நிதி மூலம் இயங்கு நிலையில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு வாயுத் துப்பாக்கிகள் வழங்க வேண்டும்.– என்றார்.

உபதவிசாளரின் கோரிக்கையை அனைத்து சபை உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டமையையடுத்து சபை நிதியில் இருந்து துப்பாக்கிகள் கொள்வனவு செய்வது என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# பஸ்ஸில் போதைப்பொருள் கடத்திய சாரதி உட்பட இருவர் சிக்கினார்கள்!

பஸ்ஸில் போதைப்பொருள் கடத்தினர் எனக் கூறப்படும் சாரதி உட்பட இருவர் அம்பாறை தலைமையகப் பொலிஸாரால் நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை தலைமையகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடல் இருந்து ஐஸ் மற்றும் ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் இருவரும் நீண்ட காலமாக பஸ்ஸில் போதைப்பொருள் கடத்தி வந்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பாறை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




## இவ்வருடம் இதுவரை

# 18 இலட்சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருகை

2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 18 இலட்சத்து ஆயிரத்து 151 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 96 ஆயிரத்து 274 ஆகும்.

அத்துடன், ஐக்கிய இராச்சியத்தில் இருந்து ஒரு 67 ஆயிரத்து 886 சுற்றுலாப் பயணிகளும், ரஷ்யாவில் இருந்து ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 950 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியில் இருந்து ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 677 சுற்றுலாப் பயணிகளும், சீனாவில் இருந்து ஒரு இலட்சத்து 8 ஆயிரத்து 40 சுற்றுலாப் பயணிகளும், பிரான்ஸில் இருந்து 90 ஆயிரத்து 250 சுற்றுலாப் பயணிகளும், ஆஸ்திரேலியாவில் இருந்து 81 ஆயிரத்து 46 சுற்றுலாப் பயணிகளும், நெதர்லாந்தில் இருந்து 53 ஆயிரத்து 922 சுற்றுலாப் பயணிகளும், அமெரிக்காவில் இருந்து 50 ஆயிரத்து 27 சுற்றுலாப் பயணிகளும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அதன்படி, 2025 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்தின் முதல் 15 நாட்களில் 75 ஆயிரத்து 657 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பேனாப் போராளியின் துணிச்சல்

ஈழத் தமிழர்களின் விடுதலைக்கான போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பி, தமிழ்ப் போராளிகள் ஈகத்தின் இமயத்தைத் தொட்டு, உச்ச தியாகங்களோடு போராடிய காலத்தில், அந்த உணர்வெழுச்சி நிலைமையை தமிழ்ச் சகோதரங்களுக்கும் சர்வதேசத்துக்கும் முரசறையும் வரலாற்றுக் கடமையை முன்னெடுத்தமை என்ற ஒரு குற்றத்திற்காகத் தங்களையே அந்த கேள்வியில் ஆகுதியாக்க வேண்டிய கட்டாயம் பல தமிழ் ஊடகவியலாளர்களுக்கு ஏற்பட்டது.

அவர்களில் முன்னிலையில் இருப்பவர் மயில்வாகனம் நிமலராஜன். அவர் படுகொலையுண்டு சரியாகக் கால் நூற்றாண்டு - 25 ஆண்டுகள் - இன்றுடன் கடக்கின்றன.

ஏனைய தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நேர்ந்தமை போல நிமலராஜன் படுகொலைக்கும் இலங்கைத் தீவில் நீதி கிடைக்கவில்லை. பொறுப்புக்கூறல் நடைமுறைப்படுத்தப்படவில்லை. உண்மை கண்டறியப்படவில்லை. அந்தப் படுகொலையைப் புரிந்தவர்கள் இன்னும் சுதந்திர வீரர்களாக நடமாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தை இராணுவம் 1996 ஏப்ரல் காலகட்டத்தில் மீளக் கைப்பற்றிய பின்னர், அங்கு கட்டவிழ்ந்த கொடூரங்கள், அராஜகங்கள், அட்டகாசங்கள், அடக்குமுறைகள், அடாவடித்தனங்கள் ஆகியவற்றையும் அப்பாவித் தமிழ் மக்களின் அவல நிலைமைகளையும் இராணுவத்துக்கு மத்தியில் நின்றபடி துணிச்சலோடும் பற்றுறுதியோடும் உலகுக்கு எடுத்தியம்பிய ஓரிரு ஊடகமறவர்களில் நிமலராஜன் முன்னிலையில் வைத்துப் போற்றப்பட வேண்டியவர்.

சிங்களப் படைகளின் அராஜகங்களை, சிங்கள மொழி மூலம், சிங்களத்துக்கே உறைப்பாக உரைத்த அவரது ஆளுமை, அவரது உயிர் பறிக்கக் காரணமாயிற்று.

தென்னிங்கையில் துணிச்சலுடன் பணியாற்றி, பிற்காலத்தில் - 2009 இல் - அந்தப் பணிக்காக தம்முயிரையே ஆகுதாக்கிய 'சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க போல, அவருக்கு முன்னரே, தமது உயிருக்குத் தமது அரும்பணியால் பேராபத்து நேரும் என்று தெரிந்து கொண்டும், அதனை முன்னெடுத்த பேனாப் போராளி நிமலராஜன்.

ஆயுதத் தரப்புகளின் அளவுக்கு மீறிய அழுத்தங்கள், நேரடி யுத்த நெருக்குவாரங்கள் போன்றவற்றுக்கு மத்தியில், அசாத்திய துணிச்சலுடன், விவகாரங்களுக்குள் புகுந்து விளையாடி செய்திகளைத் துருவித் தேடி எடுத்து அம்பலப்படுத்துவதில் நிமலராஜன் அசகாயசூரர். தமது இலக்கை எட்டுவதற்காக செய்திகளுடன் சம்பந்தப்பட்ட பல தரப்புகளுடனும், எந்தக் கீழ் மட்டத்துக்கும் இறங்கிப் போய் அவர் பழகுவார். உயர்வு - தாழ்ச்சி, பெருமை - சிறுமை பார்க்க மாட்டார். அந்தத் திறமையே அவரது உயிரைப் பறிக்கும் நெருக்கடியை ஏற்படுத்தியதோ என்று பலரும் சிந்திப்பதுண்டு.

எந்தப் பக்கத்திலிருந்தும், எந்த அழுத்தம் வந்தாலும், அதற்கு மசியாமல், தான் கொண்ட கருத்தில், தமது பேனாவுக்கு நேர்மையாக, நிமிர்ந்து நின்று எழுதுவதில் நிமலராஜனின் தனித்துவம் மெச்சத்தக்கது.

தாம் தாங்கிய பொறுப்பில் அச்சுறுத்தலுக்கு அடிபணிவது, தமது பணியின் கடப்பாட்டை சிறுமைப் படுத்தும் என்பதை உணர்ந்து, உண்மைக்காக துணிச்சலுடன் குரல் கொடுத்த ஒரு தனித்துவ ஊடக விற்பன்னன் நிமலராஜன்.

அவரது மறைவுக்கு நீதி காணப்படாமல், அந்தக் கொடூர கொலையின் சூத்திரதாரிகளை மூடி மறைத்து, உண்மையை சிறை வைக்கும் நடவடிக்கை தொடரும் ஒவ்வொரு நாளும், ஊடக தர்மம், ஊடக சுதந்திரம், ஊடகத் தனித்துவம் ஆகியவை தொடர்ந்து மீறப்படுவதாகவே கருதப்பட வேண்டும்.

அந்த வகையில் நிமலராஜன் படுகொலை சூத்திரதாரிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படும் வரை இந்த நாட்டில் ஊடக அத்துமீறல் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது என்பதுதான் அர்த்தம்.



# இலங்கை சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் பருத்தித்துறை பிரதேச செயலகம் முதலிடம்

இலங்கை சமூகப் பாதுகாப்புக்கான தேசிய விருது வழங்கும் நிகழ்வு இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையால் கடந்த வியாழக்கிழமை திருகோணமலையில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இந்த விருது வழங்கும் நிகழ்வில் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகம் பணச்சேகரிப்பின் அடிப்படையில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டதுடன் பயனாளிகள் இணைப்பின் அடிப்படையில் தேசிய ரீதியில் ஐந்தாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இவற்றுக்கான விருதை இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் தவிசாளர் டி.எம்.கே. திஸாநாயக்கவிடம் இருந்து பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் முன்னாள் செயலரும் தற்போதைய வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளருமாகிய சி.சத்தியசீலன் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் உதவிச் செயலர் பசுபதி தயானந்தன் ஆகியோர் பெற்றுக்கொண்டார்கள்.

மேலும் தனிப்பட்ட அடைவு மட்டங்களுக்கான தேசிய விருதை பொலிகண்டி மேற்கு கிராம அலுவலர் சா.அ.ரதீஸ்கரன், அல்வாய் மேற்கு கிராம அலுவலர் ர.பாலலோஜினி, அல்வாய் வடமத்தி கிராம அலுவலர் கு.பத்மலதா, புலோலி மத்தி கிராம அலுவலர் ஜெ.சங்கீதா, புலோலி தெற்கு கிராம அலுலர் சு.விஜிதா மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான பா.மனோராஜ், ம.மிதுரன், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.திருத்தேவி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் தவிசாளர் டி.எம்.கே. திஸாநாயக்க, பிரதிப் பொது முகாமையாளர் திருமதி. கல்தாரி டி சில்வா, கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புச் செயலாளர் மோ.பிரகாஷ், சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் சந்தைப்படுத்தல் லக்மால், அம்பாறை, யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு மாவட்டங்களின் அரச அதிபர்கள், மேலதிக அரச அதிபர்கள், சமுர்த்திப் பணிப்பாளர்கள், திட்டப் பணிப்பாளர்கள், பிரதேச செயலர்கள், உதவிப் பிரதேச செயலர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் , கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் அமைச்சரின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்குபற்றி சிறப்பித்தனர்.
















# வவுனியாவில் பெண்கள், சிறுவர்களுக்கான பாதுகாப்பு இல்லம் அமைக்கப்பட வேண்டும்

## அந்த மாவட்ட குடிசார் அமைப்புக்கள் கோரிக்கை

**(த.சுபேசன்)**

வவுனியா மாவட்டத்தில் குடும்ப வன்முறைகள் அதிகரித்து வருவதன் காரணமாக பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பாதுகாப்பு இல்லம் ஒன்று அவசியமானதாக காணப்படுவதாக வவுனியா மாவட்ட குடிசார் அமைப்புக்களினுடைய பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடமாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற வடக்கு மாகாண ஊராட்சிமுற்றக் கலந்துரையாடலின் போதே அவரகள் மேற்படி கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணத்தில் ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் வவுனியா மாவட்டத்தில் குடும்ப வன்முறை அதிகரித்து வருகின்றது.

இதனால் பெண்களும் அவர்களுடைய குழந்தைகளும் உடல் உள ரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பாக இருக்க மாவட்டத்தில் பாதுகாப்பு இல்லம் அமைக்கப்படுவது அவசியமானதாகக் காணப்படுகின்றது.

பாதுகாப்பு இல்லம் இன்மையால் அவர்கள் தொடர்ந்தும் வன்முறைகளுக்கு ஆளாகின்றனர். மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதுடன், பிள்ளைகளுடைய கல்வி மற்றும் பாதுகாப்பும் பாதிக்கப்படுகின்றன. –என மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் குடும்ப வன்முறைகள் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் மாத்திரமே குடும்ப வன்முறைகளைக் கட்டுப்படுத்தலாம் எனத் தெரிவித்திருந்தார்.



## யாழ். உதைபந்தாட்ட பிரிமியர் லீக்:

# இறுதிக்குள் நுழைந்தது சென். மேரிஸ் நவஜீவன்ஸுடன் இன்று கடைசிச் சமர்



'முரசு' மின்னிதழ் குழுமத்தின் (A one media) ஏற்பாட்டில் நடக்கும் யாழ். உதைபந்தாட்ட பிரிமியர் லீக் தொடரின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

தொடரின் முதலாவது அரையிறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் மணற்காடு அன்ரனிஸை வீழ்த்தி முதல் அணியாக இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இந்நிலையில் இரண்டாவது அரையிறுதியாட்டம் நேற்று நடைபெற்றது.

இதில், நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.







# வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியில் ஆளணி, வளப் பற்றாக்குறைகளால் சிக்கல்

## ரவிகரன் எம்.பி. நேரில் சென்று பார்வையிட்டார்

**(விஜயரத்தினம் சரவணன்)**

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் காணப்படும் பாரிய ஆளணி வெற்றிடங்கள் மற்றும் வளப்பாற்றாக்குறைகள் காரணமாக தாம் பலத்த இடர்பாடுகளை எதிர்நோக்கவேண்டியுள்ளமையுடன், வினைத்திறனான முறையில் கல்வியியற் கல்லூரியை கொண்டு நடாத்த முடியாத நிலை காணப்படுவதாகவும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ஜி.கமலகுமார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறையீடு செய்துள்ளார்.

அத்தோடு இவ்வருடம் வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியின் அபிவிருத்திப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட 38 மில்லியன் ரூபா நிதி திரும்பியுள்ளதால் 06 அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்கமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கல்வியியற் கல்லூரி பீடாதிபதியால் கவலை தெரிவிக்கப்பட்டது.

வவுனியா கல்வியியற் கல்லூரியில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் தெரியப்படுத்துவதற்காக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கு கல்வியியற் கல்லூரியின் தலைவர் அழைப்பு விடுத்திருந்தார். இந்த அழைப்பை ஏற்று நேற்று முன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு நேரடியாகச் சென்று கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி மற்றும் விரிவுரையாளர்களுடன் கலந்துரையாடியமையுடன் குறைபாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.

இதன்போதே மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

இவ்வருடம் வவுனியா கல்வியியற் கல்லூரியால் முன்மொழியப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் 64 மில்லியன் ரூபா பெறுமதியான 10திருத்த வேலைத்திட்டங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தன. அவ்வாறு அனுமதிக்கப்பட்ட திருத்த வேலைத்திட்டங்களில் 26 மில்லியன் ரூபா பெறுமதியான 04 வேலைத்திட்டங்களே செயற்படுத்தப்படவுள்ளன. ஏனைய திட்டங்களுக்குரிய நிதி திரும்பியுள்ளது. இதனால் 06 திருத்த வேலைத் திட்டங்களை செயற்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக 1.2 மில்லியன் ரூபா பெறுமதியான திறந்த வகுப்பறைத் திருத்தம், 1.8 மில்லியன் ரூபா பெறுமதியான உள்ளக மின் இணைப்பு வேலை, 20 மில்லியன் ரூபா பெறுமதியான வகுப்பறைத் திருத்தம், 05 மில்லியன் ரூபா பெறுமதியான விரிவுரையாளர் விடுதித் திருந்தம், 0.3 மில்லியன் ரூபாய் பெறுமதியான பீடாதிபதி மற்றும் உப பீடாதிபதி விடுதிகளின் திருத்தம், 07 மில்லியன் ரூபா பெறுமதியான வடிகாலைமைப்புத் திருத்தம் என மொத்தம் 06 திருத்த வலைத்திட்டங்களுக்குரிய 38 மில்லியன் ரூபா நிதி இவ்வாறு திரும்பியுள்ளதால் அந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் 88 ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்விசார் ஆளணி காணப்படுகின்றது. இருப்பினும் தற்போது 68 கல்விசார் ஆளணியினர் கல்லூரியில் பதிவில் உள்ளபோதும், 15பேர் இணைப்பில் வெளிநிலையங்களில் பணியாற்றுகின்றனர். இந்நிலையில் வவுனியா கல்வியியற் கல்லூரியில் தற்போது 53 கல்விசார் ஊழியர்களே கடமையில் ஈடுபட்டுள்ளனர். இதனால் வினைத்திறனான சேவையை வழங்குவதில் பல்வேறு சவால்களுக்கு முகங் கொடுக்க வேண்டியுள்ளது.

அதேவேளை கல்லூரிக்கு மொத்தம் 91 ஏற்றுக்கொள்ளப்பட்ட கல்விசாரா ஊழியர்களின் ஆளணி காணப்படுகின்றபோதும், 35 கல்விசாரா ஊழியர்களே இங்கு கடமையாற்றி வருகின்றனர்.

குறிப்பாக சாரதி, காவலாளி, முகாமைத்துவ உதவியாளர்கள், நூலகப் பொறுப்பாளர், நூலக உதவியாளர் உள்ளிட்ட பல ஆளணி நியமனங்கள் அறவே பூத்திசெய்யப்படாதநிலையில் வெற்றிடங்களாகவே காணப்படுகின்றன.

அதேவேளை காவலாளி, சுகாதாரப் பணியாளர்கள், சமையல் பணியாளர்கள் உள்ளிட்ட பல ஆளணி நியமனங்களில் பற்றாக்குறைகள் காணப்படுகின்றன.

இதனால் கல்வியியற் கல்லூரியின் நிர்வாக நடவடிக்கைகளை சீராகப் பேணுவதில் பாரிய சவால்களை எதிர்கொள்ளவேண்டிய நிலை காணப்படுகின்றது.

இதுதவிர கல்லூரியிலுள்ள வாகனம் அடிக்கடி பழுதடைகின்றது. பஸ் பழுதடைந்துஐந்துவருடங்களாகப்பயன்பாடின்றிக் காணப்படுகின்றது.

இலங்கையிலுள்ள 20 கல்வியியற் கல்லூரிகளில் 19 கல்வியியற் கல்லூரிகளுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள போதும் வவுனியா கல்வியியற் கல்லூரிக்கு மாத்திரம் இதுவரை வாகனங்கள் வழங்கப்படவில்லை.

அத்தோடு கல்லூரி மாணவர் விடுதிகள் பற்றாக்குறை காணப்படுகின்றது. தற்போது 06 பெண்கள் விடுதிகளும், 06 ஆண்கள் விடுதிகளுமாக மொத்தம் 10 விடுதிகளே காணப்படுகின்றன. ஒரு விடுதியில் 50 மாணவர்கள் தங்கியிருக்கக்கூடிய வசதிகளே உள்ள போதும் தற்போது மொத்தம் 10 விடுதிகளிலுமாக 704 கல்வியியற் கல்லூரி மாணவர்கள் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் தங்கியிருந்து தமது கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் சீரான மலசல கூடவசதிகளின்மை, விஞ்ஞான ஆய்வுகூட வசதிப் பற்றாக்குறை, நூலக வசதிப் பற்றாக்குறை, கல்வியியற்கல்லூரியின் கட்டடங்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலை, வடிகாலமைப்புச் சீரின்மை, கல்வியியற் கல்லூரி வளாகத்தில் மின் விளக்குப் பற்றாக்குறை, வகுப்பறைகளில் நவீன கற்றல் கருவிகளின் பற்றாக்குறை, உள்ளக வீதிகள் சீரின்மை, அனர்த்தம் ஏற்படக்கூடிய வகையிலான பாதுகாப்பற்ற மின்சார இணைப்புகள் எனஒ பல்வேறு உட்கட்டமைப்பு குறைபாடுகளும் காணப்படுகின்றன்.

இவ்வாறாக வவுனியா கல்வியியற்கல்லூரியில் கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணியில் உள்ள பற்றாக்குறை, உட்கட்டமைப்பு வசதிகளிலுள்ள குறைபாடுகள் காரணமாக கல்வியியற்கல்லூரியைவினைத்திறனானமுறையில் இயங்கச்செய்வதில் பாரிய இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

இவ்விடயங்களை வவுனியா கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ஜி.கமலகுமார் சுட்டிக் காட்டினார்.


மேலும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கல்வியியற் கல்லூரியின் உட்கட்டமைப்பு சார்ந்த குறைபாடுகள் தொடர்பில் நேரடியாக பார்வையிட்டார். அத்தோடு கல்வியியற்கல்லூரியில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறை,

தொடர்ச்சி▼

# வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியில் ஆளணி, வளப் பற்றாக்குறைகளால் சிக்கல்

## ரவிகரன் எம்.பி. நேரில் சென்று பார்வையிட்டார்










தொடர்ச்சி▲

உட்கட்டமைப்பு வசதிகளிலுள்ள குறைபாடுகள் மற்றும் அபிவிருத்தி நிதி திரும்பியமை தொடர்பில் உரிய இடங்களுக்கு கொண்டுசென்று உரிய தீர்வினைப் பெற்றுத்தர தம்மால் முயற்சியெடுக்கப்படுமெனவும் நாடாளு மன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது தெரிவித்தார்.

# இளைஞர்கள், யுவதிகளை பாதாள உலகுக்கு தள்ளியவர்கள், பயன்படுத்தியவர்கள் யாவர்?

## கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டும் என்கின்றார் சிறிநேசன் எம்.பி.

**(மட்டக்களப்பு நிருபர்)**

இலங்கை இளைஞர்களில் ஒரு பகுதியினரை பாதாள உலகத்தினுள் தள்ளியவர்கள், அவர்களைப் பயன்படுத் தியவர்கள் யாவர் என்பதை அறிய வேண்டியது அவசியமாகும். இது காலத் தின் கட்டாய தேவையாகும்.

– இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் நேற்று சனிக்கிழமை ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிகையிலே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:–

எதிர்காலத் தலைவர்களாக, எதிர் காலத்தை வடிக்கும் சிற்பிகளாக மாற வேண்டிய இளைஞர்களை ஆக்கவழிக் குள் கொண்டு செல்லாமல், அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் அதிகார சத்திகள், அரசியல்வாதிகள் யாவர் என் பதை இனங்காண வேண்டியது அவ சியமாகும். அவர்களுக்குரிய தண்ட னைகளும் அவசியமாகும்.

பாதாள உலகினுள் தள்ளப்படும் இளைஞர்கள் கொலை, கொள்ளை, போதைப்பொருள் வணிகம், பாலியல் பலாத்காரங்கள் போன்ற மோசமான பாதகச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

ஜனாதிபதிகளாகப் பதவி வகித்த ஜெயவர்தனா, பிரேமதாஸ, சந்திரி கா, மஹிந்த ராஜபக்ஷ, கோட்டா–பய ராஜபக்ஷ், ரணில் விக்கிரமசிங்க போன்றவர்களின் ஆட்சிக் காலங்க ளில், பாதாள உலக தாதாக்கள் என்னும் எதிர் மறைக் கலாசார சட்ட விரோதிக ளும் தமது கைவரிசைகளைக் காட்டி வந்துள்ளனர். கோணாகல சுனில், சொத்தி உபாலி, பெத்ததகன சஞ்சீவ, கஜ்ஜா, ஜ°லம்பிட்டிய அமரே, சம்பத் மனம்பபேரி, கெகல்பத்ர பத்மே என்று பல இளைஞர்கள் அரசியல்வாதிகளின் தேவையாளர்களாக இருந்துமுள்ளனர்.

சட்டவிரோத – சமூக விரோத செயல்களிலும் ஈடுபட்டு கொல்லப்பட்டும், தண்டிக்கப்பட்டும் உள்ளனர். பொட்ட நவ்பர் என்னும் குடு தாதா தனது சகா வான குடு தெரோசா என்பவருக்குத் தண்டனைத் தீர்ப்பை அளித்தமைக்க–ாக சரத் அம்பேபிட்டிய என்ற மேல் நீதி மன்ற நீதிபதியை தனது கையாள்கள் மூலமாக தெருவில் சுட்டுக்கொன்ற வரலாறும் உண்டு.

மொத்தத்தில் சில அதிகார சக்திகள் அரசியல்வாதிகளால், உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படும், பாதாளர்கள் தமது தேவை முடிந்த பின்னர், கைகழுவி விடுகின்றனர். கொன்றும் விடுகின்றனர்.

வறுமை, கல்வி அறிவின்மை, தொழிலின்மை, பிறழ்வான சூழல் போன் றவற்றால் பாதிக்கப்படும் இளைஞர் கள், யுவதிகள் போதைப்பொருள் வலைப் பின்னல், பாதாள சூனியச்சக் கரம் என்பவற்றால் வீழ்த்தப்பட்டு, சில



அரசியல்வாதிகளின் ஏவலாளிகளாக மாறிப் பின்னர், இளவயதிலேயே பலிக் கடாக்கள் ஆகி விடுகின்றனர். பலி கொடுப்பவர்கள் அரசியல்வாதிகளா கவும், அரசியல் தலைவர்களாகவும் இருப்பதுண்டு. பெண்கள் மென்மையான வர்கள் என்பார்கள். ஆனால் அவர்க ளும் சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு குடு தெரேசா, இசாரா செவ்வந்தி போன்ற வர்கள் உதாரணர்களாவர்.

எனவே, இளைஞர், யுவதிகளை தவறான பாதைகளுக்கு இட்டுச்சென்று அவர்களது எதிர்காலத்தைச் சூனியமாக் கும் அதிகார சக்திகள், அரசியல்வாதி களையும் சட்டப்பிடியில் இருந்து அரசாங் கம் தப்பவிடக்கூடாது. "வளமான நாடு – அழகான வாழ்க்கை"யை ஏற்படுத்த இதுவும் அவசியமானதாகும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# புதுக்குடியிருப்பில் ஊர்திகளின் பவனியுடன் சிறப்புற இடம்பெற்ற பண்பாட்டுப் பெருவிழா

**(பா.சதீசன்)**

புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் பண்பாட்டு பெருவிழா 40 ஊர்திகளின் பவனியுடன் ஆரம்பமாகி மிகச்சிறந்த முறையில் நேற்றையதினம் இடம்பெற்றது.

இந்தப் பெருவிழா மிகவும் பிரமாண்டமாக 40 ஊர்திகளுடன் பவனி வந்தது. பல கலை, பண்பாட்டு நிகழ்வுகளுடன் புதுக்குடியிருப்பு குழந்தையேசு ஆலயத்தின் முன்பாக அது ஆரம்பமாகி, புதுக்குடியிருப்பு நகர்வழியாக வந்தது. கலாச்சாரத்தை பேணும் வகையில் ஊர்தி பவனியுடன் பிரத்தியேகமாக அலங்கரிக்கப்பட்ட மாட்டுவண்டியில் சிறப்பு விருந்தினர்கள் வரவழைக்கப்பட்டு புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி பொன் விழா மட்டபத்தினை சென்றடைந்து கலை, கலாசார நிகழ்வுகள் அங்கு இடம்பெற்றன.

இக் கலை விழாவில் அலங்கரிக்கப்பட்ட ஊர்திகளுடன், கோலாட்டம், கும்மி, கரகம், குடமுதல், சிலம்பு போன்ற கலைகள் காண்பிக்கப்பட்டு அரங்க நிகழ்வுகளும் இடம்பெற்றன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் இ. விஜயகுமார் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுனர் நா.வேத

தொடர்ச்சி▼

































# புதுக்குடியிருப்பில் ஊர்திகளின் பவனியுடன் சிறப்புற இடம்பெற்ற பண்பாட்டுப் பெருவிழா

தொடர்ச்சி▲

நாயகன், சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ. உமாமகேஸ்வரன், வடமத்திய மாகாண பிரதி பிரதம செயலாளர் சி. குணபாலன், சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்புசுகாதாரவைத்திய அதிகாரிப.சத்திய ரூபன், கௌரவ விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு பிரதேசபை தவிசாளர் வே. கரிகாலன், புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி பணிப்பாளர் சி.பாஸ்கரன் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், புதுக்குடியிருப்பு மேம்பாட்டு பேரவையினர், பொதுமக்கள், சமூக அமைப்பினர், கலைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துடன் இணைந்து இவ்வருடம் புதுக்குடியிருப்பு மேம்பாட்டு பேரவையும் இந்த நிகழ்வை ஒழுங்குபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# அடிப்படை மாத சம்பளமாக ரூ.54 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்களுக்கு வேண்டும்!

## இ.தொ.கா. பிரதித் தலைவர் கணபதி கனகராஜ் வலியுறுத்து



எதிர்வரும் மாதம் சமர்ப்பிக்கப்பட இருக்கின்ற வரவு - செலவுத் திட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களின் குறைந்த பட்ச மாதாந்த சம்பளமாக 54 ஆயிரம் ரூபா நிர்ணயிக்கப்பட வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜ் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொழில் ஆணையாளரால் அழைக்கப்பட்ட சம்பள நிர்ணய சபை கூட்டத்திற்கு முதலாளிமார் சம்மேளனம் சமூகமளிக்காதது அவர்கள் தங்களுக்காக உழைக்கின்ற தொழிலாளர் சமூகத்தின் மேல் எவ்வளவு மரியாதை வைத்திருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றது.

தாங்களுக்காக உழைத்துக் கொடுக்கின்ற தொழிலாளர்களை மதிக்க முடியா விட்டால் தோட்டங்களை தொழிலாளர்களிடம் ஒப்படைத்து விட்டு வெளியேறுவதுதான் பொருத்தமானதாகும். உற்பத்தி டிப்படையிலான சம்பள உயர்வு என்பது கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாகக் கேட்டு புளித்துப் போன விடயமாகும். இது ஏற்றுக் கொள்ள முடியாததாகும்.

ஊட்டச்சத்து இல்லாத பழைய தேயிலை செடிகளை வைத்துக்கொண்டு எவ்வாறு உற்பத்திகளை அதிகரிக்க முடியும்? முதலாளிமார் சம்மேளனம் இலங்கையின் தேயிலைத் துறையை வெளிநாடுகளுடன் அடிக்கடி ஒப்பிட்டுக் காட்டுகிறது. பறிக்கப்படும் கொழுந்தின் அளவு ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது.

ஆனால் வெளிநாடுகளில் தேயிலை செடிகள் எவ்வாறு பராமரிக்கப்படுகிறன என்பதை முதலாளிமார் சம்மேளனம் சென்று பார்த்து விட்டு வர வேண்டும். அங்கு தேயிலை செடிகளுக்கு எவ்வாறு உரமிடப்படுகின்றன, எவ்வாறு ஊட்டச் சத்துக்கள் வழங்கப்படுகின்றன, பழைய தேயிலை செடிகளுக்கு பதிலாக மீள்நடுகைகள் எவ்வாறு மேற்கொள்ளப் படுகின்றன என்பவற்றுடன் சேர்ந்துதான் விளைச்சல் அளவையும் நோக்க வேண்டும். முதலீடுகளை அதிகரித்து, உற்பத்தியை அதிகரித்துக் காட்டிய பின், உற்பத்தி அடிப்படையான சம்பளம் பற்றி ஆலோசிக்க முடியும். தேயிலை செடிகளில் கொழுந்து வராவிட்டால் அதற்குத் தோட்ட தொழிலாளர்களால் என்ன செய்ய முடியும்?

சம்பள விடயத்தை முதலாளிமார் யதார்த்தமாகச் சிந்திக்க வேண்டும். எது எவ்வாறினும் தொழில் ஆணையாளர் கூட்டிய சம்பள நிர்ணய சபை கூட்டத்திற்கு புற முதுகை காட்டுவது முதலாளிமார் சம்மேளனத்தின் தன்னிச்சையான - எவரையும் மதிக்காத - தான்தோன்றித் தனத்தை காட்டுகிறது. இதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

அதேபோல கடந்த சம்பள நிர்ணய சபையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 1,700 ரூபா சம்பள உயர்வை கோரியது. அவ்வேளையில் 2,138 ரூபாவுக்கு குறைந்த சம்பளத்தை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என வீராப்பு பேசிய தற்போதைய அரசாங்கத்தின் இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் சம்பள நிர்ணய சபைக்கு வராமல் ஒளிந்து கொண்டமை ஏன்? எதிர்க்கட்சியில் இருக்கும் போது ஒரு நிலைப்பாடு ஆளும் கட்சியில் இருக்கும் போது ஒரு நிலைப்பாடு ஏன்? அன்று ஆட்சியைப் பிடிப்பதற்கு அந்த நிலைப்பாடு.

இன்று முதலாளிமார் சம்மேளனத்திற்கு வால் பிடிப்பதற்கு இந்த நிலைப்பாடு.


கடந்த முறை நாம் முன்வைத்த 1,700 ரூபா சம்பளத்துக்கு ஆளும் கட்சியின் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கமும் இன்று சம்பளத்துக்காக நீதிமன்றத்திற்கு செல்கின்றோம் என்று சொல்லுகின்ற தொழிற்சங்கங்களும் சாதகமாக வாக்களித்திருந்தால் அன்றே 1,700 ரூபாவைப் பெற்றிருக்க முடியும். இவர்கள் அரசியல், தொழிற்சங்க நலன்களை ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டு தங்களுடைய மனசாட்சியை தொட்டு தங்களைத் தாங்களே சுய விமர்சனம் செய்து கொள்ள வேண்டும்.

எப்போதுமே தொழிலாளர்களின் நலன்களுக்காக செயற்பட்டு வரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை வசைப்பாடி வரும் இவர்களின் உண்மையான வேஷம் தற்போது வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது. எம்மை துரோகிகள், காட்டிக் கொடுத்தவர்கள் என்று சொன்னவர்கள் இன்று ஆட்சி அதிகாரத்தில் இருக்கும்போது தோட்டத்து தொழிலாளர்களை கட்டிக் காத்தவர்களாக ஏன் மாறவில்லை?

வார்த்தை ஜாலங்களில் மூலம் எம்மை வசைபாட முடியும். ஆனால் தோட்ட தொழிலாளர்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவது அவ்வளவு இலகுவானதல்ல. இந்த கடினமான பணியை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செய்திருக்கிறது.

தோட்டத் தொழிலாளர்களுக்காக ஏற்றுக் கொள்ளக்கூடிய பொருத்தமான சம்பளத் தொகை முன்வைக்கப்படுகின்ற போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் லாபத்தையும் தொழிற்சங்க நலன்களையும் ஒதுக்கி வைத்து விட்டு சம்பள உயர்வுக்காக இணைந்து செயல்பட தயாராக இருக்கிறது.

எனினும் கண்களில் தொகையைக் காட்டி விட்டு பெற்றுக் கொள்வதற்கு முடியாத அளவில் சம்பளம் முறை தீர்மானிக்க முற்பட்டால் அதை ஒரு போதும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. - எனவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.





# நிமலராஜன் - 25 ஆண்டு நினைவுகள்; நீதி மறுக்கப்பட்ட ஊடகனின் நிலை!

- நவீனன் -

(போர்க்களத்தின் ஊடகவியலாளரான நிமலராஜன் 2000 ஒக்டோபர் 19இல் படுகொலை நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது. ஊடகர் நிமலராஜன் படுகொலையாகி 25 ஆண்டுகளாகியும் இதுவரை ஒருவித நீதியும் வழங்கப்படவில்லை. இதேவேளை சிறிலங்காவில் தமிழ் ஊடகங்கள் மீதான அடக்குமுறை இன்னமும் தொடர்கிறது)

சிறிலங்காவில் ஊடகத்துறையில் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறைகளையும் ஒடுக்கு முறைகளையும் வெளிக்கொண்டு வந்த ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அது போன்று சுயாதீனமாக கருத்துக்களை வெளிக்கொண்டு வந்த சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஊடகவியலாளர்களான நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரட்னம் சிவராம், சுப்பிரமணியம் சுகிர்தராஜன், செல்வராஜா ரஜீவர்மன், லசந்த விக்கிரமதுங்க, பரணிரூபசிங்கம் தேவகுமார் என சுதந்திர ஊடகத்துறையை காக்கவென அயராது உழைத்த எத்தனையோ பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அத்துடன் சுப்பிரமணியம் ராமச்சந்திரன், பிரகித் எக்னலிய கொட என எத்தனையோ ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

ஈழத்தில் சுயாதீன ஊடகங்களை அடக்குவதற்கு வன்முறையைப் பயன்படுத்துவதிலும், அரச படைகளின் கொடூர தாக்குதல்களும் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது.

1981இல் ஈழநாடு எரிப்புமுதல், பின்னர் இந்திய இராணுவத்தால் முரசொலி, ஈழமுரசு, நிதர்சனம் தகர்க்கப்பட்டமையில் இருந்து தமிழ் ஊடகங்களின் மீதான அடக்குமுறை பல்வேறு காலங்களில் ஆதிக்க சக்திகளினால் பிரயோகிக்கப்பட்டது.

### ஊடகர் நிமலராஜன் படுகொலை:

பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி வந்த நிமலராஜன் கடந்த 2000 ஆண்டு ஒக்டோபர் 19ஆம் திகதி கொல்லப்பட்டார். ஈழப் போரின் மையப்புள்ளியாக இருந்த யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி கொண்டிருந்த மயில்வாகனம் நிமலராஜன் 25 வருடங்களுக்கு முன்பு அவரது வீட்டில் வைத்து கொலை செய்யப்பட்டார்.

கொடூரமான போரால் இலங்கையில் பதற்றமான சூழல் நிலவிக் கொண்டிருந்த வேளையில் பலத்த ஆபத்துகளுக்கு மத்தியில் தொடர்ந்து போர் குறித்தும், மனித உரிமை மீறல்கள் மற்றும் அரசியல் நிகழ்வுகள் குறித்தும் பிபிசி தமிழ் உட்பட பல ஊடகங்களுக்கு செய்திகளை வழங்கி கொண்டிருந்தவர் நிமலராஜன்.

### அச்சுறுத்தல் மிகுந்த பணி

நிமலராஜனுக்கு அச்சுறுத்தல்கள் வருவது ஒரு தொடர்கதையாக இருந்தது. ஆனால் அதையும் தாண்டி ஊடகவியலில் அவருக்கு இருந்த ஆர்வத்தால் அவர் தனது பணியை தொடர்ந்து செய்து வந்தார்.

யாழ்ப்பாணத்தில் கிட்டதட்ட எல்லாரையும் அவருக்கு தெரியும், அவருக்கும் அனைவரையும் தெரியும் என்கிறது அவர் இறப்பு குறித்து வெளியான பிபிசியின் இரங்கல் செய்தி.

நிமலராஜனின் ஊடகப்பணி என்பது கடுமையான பணியாகதான் இருந்தது. அந்த சமயத்தில் மின்சார இணைப்பும் இல்லை. அவர் சைக்கிளில் சென்றுதான் செய்திகளை சேகரித்து வந்தார். அந்த சமயத்தில் அவருக்கு ஆபத்துகளும் அதிகம் இருந்தன. பல தரப்பட்ட அரசியல் அச்சுறுத்தல்களும் இருந்தன.

### இருளில் நடந்த கொலை

போர்க்காலத்தில் இலங்கையில் நடைபெற்ற பொதுதேர்தலில் ஏற்பட்ட வன்முறைகள் குறித்து அவர் செய்தி வழங்கினார். அதில் தற்போது இலங்கையில் அரசியல் கட்சியாக இருக்கும் ஓர் கட்சி மோசடி செய்ததாகவும், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

நிமலராஜன் கொல்லப்பட்ட அன்றும் பத்திரிகை செய்தி ஒன்றை எழுதி கொண்டிருந்தார். அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் வீட்டிற்குள் புகுந்து நிமலராஜனை துப்பாக்கியால் சுட்டனர். நிமலராஜன் கொலை தொடர்பாக சில கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இன்று வரை இந்த கொலை குற்றம் யார் மீதும் நிரூபிக்கப்படவில்லை.

### சமூக விடுதலைக்கான நடேசன் குரல்

2004 மே 31ஆம் திகதி நடேசன் படுகொலை செய்யப்பட்ட துயர நாள். தான் வாழ்ந்த சமூகத்தின் நீதிக்காக அரசியல் சமூக விடுதலைக்காக குரல் கொடுத்த பத்திரிகையாளன் ஒருவனுக்கு அதற்கு பரிசாக நடு வீதியில் சுட்டு வீழ்த்தப்பட்ட நாள்.

கிழக்கு பல்கலைக்கழக பொருளியல் துறை தலைவர் தம்பையாவின் படுகொலை பற்றி அந்த கொலை நடந்த அடுத்த ஞாயிறு தனியார் பத்திரிகை ஒன்றில் நடேசன் எழுதிய கட்டுரை வெளியாகி

தொடர்ச்சி▼





தொடர்ச்சி▲

யிருந்தது. மிக காரசாரமானதும் துணிச்சலோடு பல விடயங்களையும் சொல்லிய கட்டுரையாக அது அமைந்திருந்தது.

2004 மே மாதம் 31ஆம் திகதி காலை ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் தனது அலுவலகத்திற்கு செல்லும் வேளையில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பத்திரிகையாளர் மரணத்தை எதிர்பார்த்த வேளையிலும் பேனாவை கீழே வைப்பதற்கு மறுத்தவர் நடேசன்.

“நான் செத்தாலும் பரவாயில்லை. புற முதுகில் சூடுபட்டுச் சாகக் கூடாது. நெஞ்சில் குண்டு பாய்ந்து வித்தாக விதைக்கப்படுவதையே விரும்புகின்றேன்” என்பது நடேசனின் வாசகங்கள். நடேசனின் இந்த கருத்து நிதர்சனமானது என்பது தமிழ் பத்திரிகை உலகம் பின்னர் கண்ட உண்மை.

### சிவராமின் ஆங்கிலப் புலமை

தமிழர்களின் போராட்டம் ஒரு நியாயமற்ற, காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாதம் எனச் சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்கள் சிங்கள மக்களுக்குப் போதித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் தமிழர்களின் போராட்ட நியாயத்தையும், அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதால் மாத்திரமே இலங்கைத் தீவில் அமைதி நிலவும் என்ற யதார்த்தத்தையும் தர்க்க நியாயங்களோடு சிங்களவர்களுக்கும் புரியக் கூடியவாறு சிவராம் ஆங்கிலத்தில விளக்கினார். சிவராமுடைய எழுத்தின் போக்கை மட்டுமன்றி அன்றைய காலகட்டத்தில் பணியாற்றிய பெரும்பாலான தமிழ் எழுத்தாளர்களின் போக்கையும் மாற்றியமைத்தது.

பத்திரிகைகளில் அவர் எழுதிய கட்டுரைகளுக்கு அப்பால் சிங்களத் தேசியம் பேசிய ஊடகவியலாளர்களுடனும் அவர் திரைமறைவில் தர்க்கிக்க வேண்டியிருந்தது. எவருமே துணிந்து செய்ய முன்வராத ஒரு காரியத்தை கொழும்பில் இருந்து கொண்டே செய்ய முன்வந்த சிவராமின் துணிச்சல் பாராட்டப்பட வேண்டியது.

சிவராம் பத்திரிகைகளில் முன்வைத்த கருத்துக்களுக்காக நேரில் கேள்வி எழுப்பப்பட்ட போதுகளில் அவற்றுக்கு அவர் ஆணித்தரமாகப் பதில் கூறவேண்டி ஏற்பட்டது.

தனது கருத்துக்களுக்காக சிங்கள ஊடகவியலாளர்களுடன் மோதவேண்டிய சூழல் உருவான போதிலும் அவர்களுடனான தொழில்முறை உறவை வளர்த்துக் கொள்ள சிவராம் தவறவில்லை.

அதுமட்டுமன்றிசிங்களப்பேரினவாதத்தைஎதிர்த்து நிற்கும் மாற்றின ஊடகவியலாளர்களுடனும் பல்வேறு தளங்களில் அவர் கரங் கோர்த்துக் கொண்டார்.

மறுபுறம், தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கிய பல பிரச்சினைகள் சிங்கள ஊடக அமைப்புக்களால் கண்டு கொள்ளாமல் விடப்பட்டபோது ‘இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்’ என்ற அமைப்பை உருவாக்குவதில் முன்னோடியாக நின்றும் செயற்பட்டார். பின்னர் 28 ஏப்பரல் 2005 அன்று சிவராம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.





# சந்தர்ப்பவாத சைக்கிள் – சங்குக் கூட்டின் சிதைவு!



புருஜோத்தமன் தங்கமயில்

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பின்னராக வடக்கில் உதயமான “அரசியல் கூட்டு” உடையத் தொடங்கிவிட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைமையிலானதமிழ்த்தேசியப்பேரவைக்கும் (சைக்கிள்), ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் (சங்கு) இடையில் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது தொடர்பில் தேர்தலுக்குப் பின்னரான நாள்களில் இணக்கப்பாடு ஏற்பட்டது. அதன் பிரகாரம், அவர்கள் ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டார்கள். அதற்கு, “கொள்கைக் கூட்டு” என்றும் பெயர் சூட்டியிருந்தார்கள்.

உண்மையில் இந்தக் கூட்டின் பிரதான இலக்கு வடக்கில் ஒரு சில உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றுவது என்ற அளவிலேயே இருந்தது. சங்குக் கூட்டணி, தமிழரசுக் கட்சியிடம் கோரிய ஒரு சில சபைகளை, அந்தக் கட்சி வழங்கியிருந்தால், அவர்கள் தமிழரசில் சங்கமித்திருப்பார்கள். ஆனால், தமிழரசுக் கட்சி அந்த விட்டுக் கொடுப்பைச் செய்யத் தயாராக இருக்கவில்லை. அதன் விளைவாகத்தான், சைக்கிளுக்கும் சங்குக்கும் இடையிலான கூட்டு உருவானது. அதற்கு அவர்கள் “கொள்கைக் கூட்டு” என்று வண்ணம் பூசி மக்களின் மண்டையைக் கழுவ நினைத்தார்கள். ஆனால், அது எடுபடவில்லை.

அடிப்படையில், உள்ளூராட்சி மன்றத்தில் ஆட்சி அமைப்பது தொடர்பிலான ஒற்றை இலக்கே சைக்கிள் – சங்குக் கூட்டிடம் இருந்தது. அதற்காக, தமிழரசுக் கட்சியின் தலைமையோடு முரண்பட்டுக் கொண்டிருக்கும் உறுப்பினர்களிடம் தூது சென்று, இரகசிய வாக்கெடுப்பு நடத்தக் கோரிய காட்சிகள் எல்லாமும் அரங்கேறி, அவை அப்பட்டமானது. அதனால், ஒரு சில சபைகளை சைக்கிள் – சங்குக் கூட்டு கைப்பற்றவும் செய்தது. அந்தக் கூட்டின் காலாவதித் திகதி அத்தோடு முடிந்துவிட்டது. அதன் பின்னராக அந்தக் கூட்டு இருப்பது மாதிரிக் காட்டிக் கொள்வதற்கு கஜேந்திரகுமாரும் அவரது சைக்கிள் கூட்டணியினரும் முயற்சித்துக் கொண்டிருந்தனர். ஆனால், சங்குக் கூட்டணியின் தலைவர்கள் அடுத்த மாகாண சபைத் தேர்தலை இலக்கு வைத்து, தமிழரசுக் கட்சியோடு இணக்கத்தைக் காட்டத் தொடங்கிவிட்டார்கள். உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பிலான பேச்சுக்களில் இணக்கப்பாடு காண முடியாவிட்டாலும், எப்படியாவது மாகாண சபைத் தேர்தலுக்கு பழையபடி “தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு” அடையாளத்தோடு தமிழரசுக் கட்சியோடு ஒட்டிக்கொள்வதுதான், தங்களுக்கு பயனளிக்கும் என்பது சங்குக் கூட்டணித் தலைவர்களின் நிலைப்பாடு.

சைக்கிள் – சங்குக் கூட்டில் கட்சிகளும் அமைப்புக்களுமாக பல தரப்புக்கள் இருக்கின்றன. சில கட்சிகளிலும் அமைப்புக்களிலும் ஆள்கள் யாரும் இல்லைதான். ஆனாலும் அவை பெயரளவில் தங்களையும் ஒரு தரப்பாக முன்வைக்கின்றன. அப்படியான கட்டத்தில், மாகாண சபைத் தேர்தல் வந்தால், ஆசனப் பங்கீட்டில் சிக்கல் உருவாகும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் யாழ்ப்பாணத்துக்குள் 50:50 விகிதத்தில் ஆசனப்பங்கீடு செய்ய வேண்டி வரும். ஆனால், வன்னியில் அந்த நிலை இல்லை. அங்கு, சங்குக் கூட்டணி அதிக ஆசனப்பங்கீட்டைக் கோரும். யாழ்ப்பாணத்தில் சைக்கிள் – சங்குக் கூட்டில் ஒவ்வொரு கட்சிக்கும் அமைப்புக்கும் ஓர் ஆசனத்தை ஒதுக்கினாலே, சிலவேளை சில கட்சிகளும் அமைப்புக்களும் ஆசனங்களின்றி வெளியில் நிற்க வேண்டி வரும். இந்தச் சிக்கலுக்குள் சிக்கிக் கொள்வதற்கு சங்குக் கூட்டணியின் தலைவர்கள் தயாராக இல்லை. அத்தோடு, சங்குக் கூட்டணியின் வன்னி மற்றும் கிழக்கு முக்கியஸ்தர்கள், தங்கள் பிரதேசங்களில் எந்தப் பயனும் அளிக்காத சைக்கிளோடு கூட்டணி அமைப்பதில், ஆரம்பம் முதலே ஆர்வமின்றியே இருந்தார்கள். இந்தக் கூட்டணி நீடித்தால், தேவையற்ற வகையில், சைக்கிளை தங்களின் பாரமாக அவை சுமக்க வேண்டி வரும்.

இந்தக் கூட்டணி நீடித்தால், தேவையற்ற வகையில், சைக்கிளை தங்களின் பகுதிகளில் வளர்ப்பதற்குத் தாங்களே காரணமாகி விடுவோம். அது, எதிர்காலத்தில் தங்களின் கண்களையே குத்திவிடும் என்பது அவர்களின் நிலைப்பாடு. அப்படியான நிலையில், அவர்களுக்கு எப்போதுமே பாதுகாப்பான கூட்டு என்பது தமிழரசோடு நிகழ்வதுதான். அந்தக் கூட்டு அமைந்தால், தாங்கள் எவ்வளவு குடைச்சல்கள் கொடுத்தாலும் வீட்டுக்காரர்கள் பெரிதாக கண்டு கொள்ளமாட்டார்கள். ஆனால், வெற்றிவாய்ப்பும் இலகுவானது. அதாவது, “கனியிருக்க ஏன் காயைக் கவர வேண்டும்?“ என்கிற நிலை. அதிலும் சங்குக்கூட்டணியைப் பொறுத்தளவில், சைக்கிள் கூட்டில் தொடர்வது என்பது பிஞ்சைக் கவர்வது போன்றது. அந்தப் பிஞ்சு காயாகும் என்று முழுவதுமாக நம்ப முடியாது. அது அழுகி விழும் சாத்தியங்கள்

தொடர்ச்சி▼




# சந்தர்ப்பவாத சைக்கிள் – சங்குக் கூட்டின் சிதைவு!

தொடர்ச்சி▲

அதிகம். அதற்கு, தமிழரசு எனும் கனி எவ்வளவு உவப்பானது. இப்போது, சங்குக் கூட்டணி சைக்கிள் கூட்டணியில் இருப்பவர்களைஅதே நிலைப்பாட்டோடு தான் கையாண்டு கொண்டிருக்கிறது.

அத்தோடு, மாகாண சபைத் தேர்தல் வந்தால், எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்ற பிரச்சினைகள் எழும் என்பதை சங்குக் கூட்டணிக்காரர்கள் உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். முன்னணி, காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் இருந்து இறங்கி வருவதற்கு வாய்ப்புக்கள் குறைவு. அப்படியான நிலையில், சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுவது என்பது, சங்குக் கூட்டணியைப் பொறுத்தளவில் தேவையற்ற விதத்தில் சைக்கிள் சின்னத்தை பிரபலப்படுத்தும் வேலையாகவும் முடியும். இப்போதைய சங்குக் கூட்டணிக்கார்கள், “குத்து விளக்கு” கூட்டணிக்காரர்களாக ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் பொது வேட்பாளர் என்ற காவடியை எடுத்து ஆடியவர்களோடு சேர்ந்து ஆடி, உருண்டு பிரண்டவர்கள். தமிழ்ப் பொது வேட்பாளருக்காக சங்குச் சின்னத்தைப் பெற்று, அதன் மூலம் அந்தச் சின்னம் சற்று பிரபலம் அடைந்ததும், பொதுத் தேர்தலுக்காக முன்னைய ஒப்பந்தங்களை மீறி அந்தச் சின்னத்தையே திருடிக் கொண்டவர்கள். இன்றைக்கு அவர்கள் சங்குக் கூட்டணிக்காரர்கள் என்ற அடையாளத்தைப் பெற்றுவிட்டார்கள். சங்குச் சின்னத்தை பிரேரித்த தமிழரசின் சிரேஷ்ட உறுப்பினர் சிறீதரனோ, அந்தச் சின்னத்தில் போட்டியிட்ட அரியநேத்திரனோ, அதற்காக வரிந்து கட்டி வாதம் புரிந்த அரசியல் பத்தியாளர்களோ சங்குச் சின்னத்தைப் பற்றி இப்போது பேச முடியாது. சங்கு என்றால், அது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்று மாறிவிட்டது. அப்படியாக ஒரு அடையாளத்தை திருடிக் கொண்ட ஒரு தரப்பு, அந்த அடையாளத்தை தங்களைவிட பலம் குறைந்தவர்களிடம் இவர்களில் ஒருவரான சித்தார்த்தன் மூலம், ஈபிடிபியின் செயலாளர் நாயகமான டக்ளஸ் தேவானந்தாவுடன், ஆதரவு கோரி பேச்சு நடத்த முயன்ற காட்சிகள் எல்லாமும் அரங்கேறின.

தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைமைத்துவம் உள்ளூராட்சி மன்றங்களில் ஒருசில சபைகளை இழந்தாலும், சங்குக் கூட்டணியின் ஒட்டுமொத்த இழுப்புக்கும் பின்னால் செல்வதில்லை என்ற முடிவில் உறுதியாக இருக்கின்றது. அதனால்தான், கூட்டமைப்பாக இருந்த காலங்களில் பங்காளிக் கட்சிகளுக்கு விட்டுக்கொடுத்த சபைகளைக் கூட, இம்முறை அவர்களுக்கு வழங்குவதற்கு தயாராக இருக்கவில்லை. அதனால்தான், சங்குக் கூட்டணி சைக்கிளோடு சங்கமித்தது. கடந்த காலங்களில் கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டு தமிழரசுக் கட்சிக்கு பங்காளிக் கட்சிகள் கொடுத்த குடைச்சல்கள் தொடர்பில், தற்போதைய தலைமை கவனமாக இருக்கின்றது. சங்குக் கூட்டணிக்காரர்களை இலகுவாக வளைக்கலாம், ஆனால் கடந்த காலங்க

தொடர்ச்சி▼





# சந்தர்ப்பவாத சைக்கிள் – சங்குக் கூட்டின் சிதைவு!

தொடர்ச்சி▲

ளில் அலைக்கழித்தது போன்று இனியும் அலைக்கழிக்க அனுமதிப்பதில்லை என்ற முடிவோடும்தான் விடயங்களை கையாள்கிறார்கள். அதன்போக்கில்தான், சங்குக் கூட்டணிக்கார்களை அணுகுகிறார்கள். சங்குக் கூட்டணிக்காரர்களுக்கு தமிழரசுக் கட்சித் தலைவர்களோடு இருக்கும் நெருக்கம் சைக்கிள் கட்சியின் தலைவர்களோடு இல்லை. கடந்த காலங்களில் துரோகி அடையாளத்தை தூக்கிப் பிடித்து எரிச்சலூட்டியவர்கள் சைக்கிள் தரப்பினர் என்பது சங்குக் கூட்டணியின் தலைவர்களின் நிலைப்பாடு. அதிலும் சித்தார்த்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றவர்களுக்கு தங்களின் சிரேஷ்டத் தன்மையை சைக்கிள் கூட்டணி மதிக்கவில்லை என்கிற எரிச்சலும் உண்டு. தொடர்ச்சியாக பதவி நிலைகளில் இருந்துவிட்டு, அதிலிருந்து இறக்கி விட்டதும் ஏற்படும் ஏமாற்றத்தின் எரிச்சல். அதாவது, அரச உயர் பதவி நிலைகளில் இருந்தவர்கள் அந்தப் பதவிகளில் இருந்து ஓய்வுபெற்றதும் சந்திக்கும் உளச் சிக்கல். அவர்களின் பதவி நிலைகளின் வழியாக அனுபவித்த அதிகாரங்களையும் சமூக அந்தஸ்தையும், ஓய்வுக்குப் பின்னும் விட்டுவிடத் தயாரில்லாத மன நிலை. அந்த மனநிலையின் சொந்தக்காரர்களாக அரசியல்வாதிகள் இருப்பது இயல்புதான். அதன் போக்கில், சித்தார்த்தனுக்கும் சுரேஷிக்கும் தங்களுக்கான அங்கீகாரத்துக்கான பெரும் ஏக்கம் இன்னமும் உண்டு. கடந்த காலங்களில் தங்களை இந்தியாவின் கைக்கூலிகள் என்று கூவிக்கொண்டது பெரும்பாலும் சைக்கிள் கட்சிக்காரர்களினால் அது நிகழ்த்தப்பட்டது என்பதும், அவர்கள் அளவில் இருக்கும் வருத்தம்.

அத்தோடு, எப்போதுமே பெரிய அண்ணனாக இருக்கும் தரப்பிடம் தம்பியாக இருப்பதற்கு யாரும் பெரிதாக அலட்டிக் கொள்ள மாட்டார்கள். ஆனால், சம பலத்தில் இருக்கும் இரு தரப்புக்கள் ஓர் இணக்கப்பாட்டுக்கு வரும் போது, இரு தரப்புக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்றுதான் இரு தரப்பினரும் விரும்புவார்கள். ஆனால், சைக்கிளைவிட ஒப்பீட்டளவில் தாம் அதிக பலமுடையவர்கள் என்பது சங்குக் கூட்டணியின் நிலைப்பாடு. அப்படியிருக்க சைக்கிள் – சங்குக் கூட்டு என்பதன் தலைமை என்பது கஜேந்திரகுமாரை சுற்றி கட்டமைக்கப்படுவதும், சித்தார்த்தன் சுரேஷ் உள்ளிட்டவர்களின் பிரச்சினை. யாழ்ப்பாணத்துக்குள் மாத்திரம் வாக்குகளைக் கொண்டிருக்கும் ஒரு தரப்பிடம் இரண்டாம் நிலை அடைவது என்பது சிக்கலானது. அதனால் எந்தப் பயனும் இல்லை எனும் போது சங்கு கூட்டணியின் இப்போதையை ஓட்டம் புரிந்து கொள்ளப்படக் கூடியது. மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் எப்படியும் தமிழரசுக் கட்சிதான் முதன்மைச் சக்தியாக இருக்கும். அதனோடு இணைந்து ஓடினால்தான் அங்கு ஆட்சி அதிகாரத்தை அடைய முடியும். இல்லையென்றால், எதிர்க்கட்சியில் அமர வேண்டி வரும். அப்படி அமர்ந்தாலும் சைக்கிள் கூட்டணியின் இணைச்சக்தியாகவே தாங்களை முன்வைத்து, சங்குக் கூட்டணி நடத்திக் கொண்டிருக்கும் ஆட்டம் எல்லாமும் அதனை நோக்கியதே. மற்றும்படி, கொள்கை கோட்பாடு மற்றும் இலக்குகளை நோக்கிய பயணம் இல்லை. சைக்கிள் – சங்குக் கூட்டு உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களைப் பெறுவதற்கான நிகழ்ந்த ஒரு குறுங்கூட்டு. அது அதன் இலக்குகளை பகுதியளவில் அடைந்ததும் உடையத் தொடங்கிவிட்டது.

இப்போது, கஜேந்திரகுமார் சங்குக் கூட்டணியின் நடவடிக்கைகள் தொடர்பில் அதிருப்தி வெளியிடுகிறார். கொள்கைக் கூட்டு ஒப்பந்தத்தை மதித்துச் செயற்பட வேண்டும். இல்லையென்றால், கூட்டை விட்டு வெளியேறலாம் என்ற தோரணையில், ஊடகங்களில் பேசத் தொடங்கியிருக்கிறார். ஆனால், சங்குக் கூட்டணியின் பேச்சாளராக இருக்கும் சுரேஷ் பிரேமச்சந்திரன், “கஜேந்திரகுமார் தவறாக விளக்கிக் கொண்டு கருத்துரைக்கிறார். அவருக்கு புரிதல் அவசியம்” என்கிறார். அரசமைப்பில் 13ஆவது திருத்தத்தை வலுப்படுத்துவது, அதாவது மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை முழுமையாக அமுல்படுத்தக் கோருவதுதான், தங்களின் தற்போதைய சந்திப்புக்கள் மற்றும் கூட்டங்களின் நோக்கம் என்கிறார். இந்த விடயத்தை முன்வைத்துதான் இப்போது சச்சரவுகள் எழுந்தன எனக் காட்டிக் கொள்ளப்படுகின்றது. ஆனால், மாகாண சபைத் தேர்தல்களை இலக்கு வைத்து சங்குக் கூட்டணி தன்னுடைய பயணத்தை கடந்த பொதுத் தேர்தல் தோல்வியில் இருந்து ஆரம்பித்துவிட்டது. இடையில், அவர்கள் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதற்கான சைக்கிளின் மீது சில நாள்கள் ஏறி ஓடினார்கள். அவ்வளவுதான். அதனைப் புரிந்து கொள்வதற்கு பெரிய சூத்திரங்கள் எதுவும் தேவையில்லை.



# நல்லூர் சங்கிலியன் பூங்கா பகுதியை அரச காணியாக்கி அபகரிக்கும் திட்டம்

## உண்மைகளை அம்பலப்படுத்தி ஆளுநருக்கு தமிழரசுக் கட்சித் தலைவர் சி.வி.கே. கடிதம்

நல்லூர் சங்கிலியன் பூங்காப் பகுதியை அரச காணியாகக் காட்டி அபகரிக்கும் திட்டம் ஒன்று கட்டவிழ்வது குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கடந்த 16 ஆம் திகதி வடக்கு ஆளுநர் நா.வேதநாயகனுக்கு "நல்லூர் சங்கிலியன் பூங்கா" என்ற தலைப்பில் அனுப்பியுள்ள கடிதத்தில் அம்பலப்படுத்தியுள்ளார்.

அந்தக் கடிதத்தின் முழு விவரம் வருமாறு:-

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியின் கிழக்குப் புறமாக அமையப் பெற்றதே மேற்குறிப்பிட்ட "நல்லூர் சங்கிலியன் பூங்கா". 1989 வரை செம்மணி வீதி என்பது அதற்கு வடக்காக அமைந்துள்ள தேவாலயத்துக்கு எதிராக பருத்தித் துறை வீதி வரையானதாக இருந்தது. இதற்கு தெற்காகவும், பருத்தித்துறை வீதிக்கு கிழக்காகவும் முத்திரை சந்தையும், மாநகர சபையால் வடகைக்கு கொடுக்கப்பட்ட கடைகளும் இருந்தன.

1989 இல் பருத்தித்துறை வீதியில் இருந்து தேவாலயத்துக்கு நேராகச் சென்ற செம்மணி வீதியின் பகுதி தெற்குப் பக்கமாக இருந்த தனியார் காணிகளை தெற்கு எல்லையாகக் கொண்டு தற்போதுள்ளபடி செம்மணி வீதி மாற்றப்பட்டு, நேரான வீதியாக அமைக்கப்பட்டது.

இதனால் இந்த செம்மணி வீதியின் வடக்காக செட்டியார் தோட்டம் என்று அழைக்கப்படும் காணியை வடக்கு எல்லையாகக் கொண்ட காணியாக ஒன்றிணைக்கப்பட்டது. இந்த முழுக் காணியும் மாநகர சபையின் ஆட்சியின் கீழ் இருந்து வருவது வரலாறு.

1966ஆம் ஆண்டின் நில அளவை நாயகத்தின் வரைபடத்தின்படி அப்போதே இங்கு சந்தை இருந்தமை உறுதிப்படுத்தப்படுகிறது. சந்தைகளின் நிர்வாகம் நாடு பூராகவும் உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரத்திற்குட்பட்டது என்பது சட்டப்படி தெளிவானது. (நில அளவை வரைபடத்தின் பிரதி இணைப்பட்டு கிறது)

இந்தப் பகுதி யாழ்ப்பாண மாநகர சபையின் "சங்கிலி தோப்பு" என்ற பெயரிலான 05 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ளது.

என்னைப் பொறுத்தவரை நான் 1950 ஆம் ஆண்டு ஸ்ரான்லி கல்லூரி மாண வனாக முத்திரைச் சந்தையைக் கடந்து சென்ற அனுபவமும், 1960 இல் யாழ்ப் பாண மாநகர சபையின் ஓர் அலுவலராக சேர்ந்தபொழுது மேற்குறிப்பிட்ட சந்தையும், கடைகளும் மாநகர சபை நிர்வாகத்தின் கீழ் இருந்தமையும் 1978 இல் மாநகர சபையின் ஆணையாளராக இருந்த பொழுது சிறுவர் பூங்கா நிறுவிய அனுபவமும் உண்டு.

ஈழத் தமிழர் வரலாற்றில் யாழ்ப்பாண இராஜ்யத்தின் அடையாளங்களாக இந்தப் பகுதி விளங்குகிறது. யாழ்ப்பாண இராஜ்சியம் பற்றி இலங்கையின் பிரபல வரலாற்றாசிரியரான K.M.de.Silva "A History of SriLanka" எனும் நூலில் பின்வரு மாறு கூறுகிறார்:-

"In the second half of the fourteenth Country, the fortunes of the Sinhalese reached their nadir. True the writ of the Gampola kings appears to have run in Rohana as well as on the western seaboard, but Jaffna under the Ariyacakravatis was much the most powerful kingdom in the Island "

இத்தனை பெருமைக்குரிய மண்ணில் உள்ள ஒரேயொரு வெளி நிலமான முத்திரைச் சந்தைப் பகுதியில் மன்னன் சங்கிலியனின் பெயர் நீண்டு நிற்க வேண்டும் என்ற எண்ணத்தின்படியே, செம்மணி வீதியை இடம் மாற்றி முழுப் பகுதியையும் ஒன்றியைத்து "சங்கிலியன் பூங்கா" 1989 இல் அமைக்கப்பட்டது. அது மாநகர நிர்வாகத்தின் கீழ் இருந்து வருகிறது.

இந்த நிலையில் நல்லூர் பிரதேச செயலக அதிகாரிகள் இந்த நிலம் மாநகர சபைக்கு உரித்தா

தொடர்ச்சி▼



# நல்லூர் சங்கிலியன் பூங்கா பகுதியை அரச காணியாக்கி அபகரிக்கும் திட்டம்

## உண்மைகளை அம்பலப்படுத்தி ஆளுநருக்கு தமிழரசுக் கட்சித் தலைவர் சி.வி.கே. கடிதம்

தொடர்ச்சி▲

னது அல்ல என்ற தோரணையிலும் அது அரச காணி (State Land) என்ற தோரணையிலும் இங்கு நல்லூர் பிரதேச செயலகம் அமைப்பதற்கு அனுமதி கோரி தங்களுக்கு சமர்ப்பித்த கோரிக்கையின் பேரில் தங்கள் தலைமையில் ஓர் அதிகாரிகள் கலந்துரையாடல் கடந்த வாரம் நடைபெற்றதாக ஊடகச் செய்தி மூலம் அறிய வந்தது. இது மிகுந்த அதிர்ச்சியைத் தந்தது. இதற்கு மேலாக நல்லூர் பிரதேச செயலகத்திற்கு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தினால் வழங்கப்பட்ட குத்தகை 25 அல்லது 30 வருடம் என்றும் ஏற்கனவே அதில் 15 அல்லது 20 வருடங்கள் சென்றுவிட்டதாகவும், நல்லூர் கோவில் நிர்வாகம் கால நீடிப்புக்கு மறுப்பு தெரிவிப்பதாகவும் இந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாக தெரிய வந்தது. இவை முழுவதுமே உண்மைக்கு புறம்பானவை.

நல்லூர் பிரதேச செயலகத்திற்கு அதன் கட்டடம் அமைந்துள்ள 10 பரப்பு காணியை மாநகர சபையின் குத்தகையில் இருந்து நீக்கி 01.05.2005 ஆம் திகதியில் இருந்து 50 வருடக் குத்தகையை நீதிமன்ற அனுமதியைப் பெற்றுக் கொடுத்ததே நான்தான். அதன் குத்தகை நிழற்பிரதி இணைக்கப்படுகிறது. அதில் சாட்சியாக நானே ஒப்பமிட்டிருப்பதையும் காணலாம். குத்தகைக் காலம் இன்னும் 30 வருடங்கள் இருக்கையிலும், குத்தகை முடிவுக் காலத்தில் அதனை நீடிப்பதற்கான ஏற்பாடு உடன்படிக்கையிலேயே உள்ளடக்கப்பட்டு இருக்கையிலும், சங்கிலி மன்னனின் பெயரில் அமைந்த பூங்காவை இல்லாமல் அழிக்கும் நோக்கில் இந்தக் காணியை தமக்கு வழங்குமாறு கோரும் நோக்கம் புரிந்து கொள்ள முடியாதததும், ஏற்றுக் கொள்ள முடியாததுமாகும். இதன் பின்னணியில் ஏதாவது மறைகரங்கள் இருக்கின்றனவா என்ற சந்தேகம் எழுவதும் இயல்பானதே.

இதில் எனக்கிருந்த மிகப் பெரிய ஆச்சரியம் மாநகர சபை நிர்வாகமும் தெளிவற்று குழம்பியிருந்தமையாகும். கடந்த 13.10.2025 அவர்களுடன் கலந்துரையாடி முழு வரலாற்று விவரங்களையும் நான் தெளிவுபடுத்தியதன் அடிப்படை யில் கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாக தமது ஆட்சி உரித்தில் இருந்த இந்தக் காணியைச் சுற்றி சுற்றுமதில் அமைத்து பூங்காவை மேம்படுத்த யாழ். மாநகர சபை 14.10.2025 ஆம் திகதி ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இதனை எனது 17.07.2025 ஆம் திகதி கடிதம் மூலம் நான் ஏற்கனவே கோரியிருந்தமையையும் இங்கே குறிப்பிடவேண்டும்.

எனவே, இந்த விடயம் தங்களது கவனத்திற்கு வந்துள்ள நிலையில், இவ்வாறான நிலை மேலும் தொங்கு நிலையில் தொடராமல் இருப்பதற்கான பொருத்தமான நடவடிக்கையை எடுத்து இந்த தமிழின அரசாட்சியின் சின்னமாக “நல்லூர் சங்கிலியன் பூங்கா” எனும் பெயரில் எம்மின வரலாற்றை வெளிப்படுத்திக் கொண்டு தொடர்வதற்கான திடமான நிலையை ஏற்படுத்தி உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். – என்று உள்ளது.







# 2026 முதல் நடைமுறையாகும் புதிய கல்விச் சீர்திருத்தம் தீவகக் கல்வி வலய ஆசிரியர்களுக்கு விசேட செயலமர்வு

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் பிரகாரம்2026ஆம்ஆண்டுமுதல்முன்னெடுக்கப்படவுள்ள பாடத் திட்டங்களின் வழிகாட்டல் பொறிமுறை தொடர்பாக, ஆசிரியர்களுக்கான செயலமர்வின் கள ஆய்வொன்று நேற்றையதினம் தீவக கல்வி வலயத்தால் முன்னெடுக்கப்பட்டது.

உலகச் சுற்றோட்டத்தின் தேவைக்கேற்ப நவீன கல்வி முறையை எமது மாணவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு கல்விக் கொள்கையில் மாற்றம் கொண்டு வரப்பட்டதற்கு இணங்க, 2026ஆம் ஆண்டுமுதல் தரம் ஒன்று மற்றும் 6 ஆகிய வகுப்புகளுக்கு நடைமுறைப் படுத்தப்படும்

பாடத் திட்டத்திற்கேற்ப தீவகக் கல்வி வலையத்தின் விஞ்ஞானம் மற்றும் கணித பாடங்களின் ஆசிரியர்களுக்காகவே இந்தச் செயலமர்வின் வெளிக்கள ஆய்வு நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நில அமைவுகள், சூழலின் அக, புறத் தன்மைகள் மற்றும் தாவரங்களின் இனப் பரம்பல், நீர் நிலைகளின் அவதானிப்புகள் குறித்து ஆசிரியர்களுக்கு கள ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

# ஹட்டனில் திடீர் சோதனை நடவடிக்கை









**(மஸ்கெலியா நிருபர்)**

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நேற்று ஹட்டன் நகரில் நகரசபையுடன் இணைந்து சுகாதார அதிகாரிகள் திடீர் பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது உணவுச்சட்டத்தை மீறி உணவை கையாளும் நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொது சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொது சுகாதார உயர் அதிகாரி பி.ஏ.பாஸ்கரன், அம்பகமுவ சுகாதார வைத்திய அதிகாரி

வைத்தியர் சந்ரராஜன், ஹட்டன் பொது சுகாதார பரிசோதகர் சௌந்தர்ராகவன் ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் பரிசோதனையில் ஈடுபட்டனர்.

ஹட்டன் நகரசபை தலைவர் அசோக்க கருணாரத்னவின் ஒத்துழைப்புடன் தொடர்ந்தும் அடிக்கடி பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.




# விறுவிறுப்பாக இறுதிப்போட்டியில் வெற்றிவாகை சூடியது வட்டுவாகல்

(பா.சதீசன்)

அளம்பில் இளந்தென்றல் விளையாட்டு கழகம் நடத்திய உதைபந்தாட்டத் தொடரில், வட்டுவாகல் உதயசூரியன் அணி சம்பியனானது.

முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுமதியுடன் அளம்பில் இளந்தென்றல் விளையாட்டு கழகம் நடத்திய 2025ஆம் ஆண்டுக்கான அமரர் மிக்கேற்பிள்ளை ஞாபகார்த்த கிண்ண இறுதிப் போட்டி அமரரது பேரப்பிள்ளைகளின் ஏற்பாட்டில் கடந்த 16ஆம் திகதி நடைபெற்றது.

அளம்பில் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தின் இருபெரும் துருவங்களான செம்மலை உதயசூரியன் அணியை எதிர்த்து வட்டுவாகல் உதயசூரியன் அணி மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இச்சமரில் வட்டுவாகல் உதயசூரியன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

போட்டி முடிவில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. அத்துடன், கல்வி பொதுதர சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ சித்தி பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

அதேவேளை இந்நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகளுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இளம்தென்றல் விளையாட்டு கழகத்தின் தலைவர் ஜெசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக முல்லை மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவர் குறிஞ்சிக்குமரன், கரிக்கட்டுமூலை கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் ஜோன்சன் மோகனராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக அளம்பில் அந்தோனியார் புனித ஆலய பங்குத்தந்தை வண. பிதா.எமில்போல், செம்மலை மாணிக்கப்பிள்ளையார் ஆலய சிவஸ்ரீ மீ. கிருசாந்த குருக்கள், கரைதுறைப்பற்று விளையாட்டு உத்தியோகத்தர் த. வரதன், அளம்பில் வடக்கு, தெற்கு கிராம சேவை உத்தியோகத்தர்கள், மாதர் அபிவிருத்தி சங்கத்தினர், இளைஞர்கள், பொதுமக்கள், விளையாட்டு வீரர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.
















# கரூர் நெரிசலில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு த.வெ.க. சார்பில் 20 லட்சம் ரூபா வழங்கப்பட்டது






கரூரில் விஜய் பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் வங்கிக் கணக்குகளில் த.வெ.க. சார்பில் சனிக்கிழமை தலா 20 லட்சம் இந்திய ரூபா வரவு வைக்கப்பட்டுள்ளது.

கரூர் வேலுசாமிபுரத்தில் த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்ற பிரசாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். மேலும், 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் உயரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமிழக அரசு சார்பில் தலா 10 லட்சம் இந்திய ரூபா நிவாரணம் வழங்கப்பட்டது. மேலும், காங்கிரஸ் சார்பில் தலா 2.50 லட்சம் இந்திய ரூபா, ம.நீ.ம. சார்பில் தலா ஒரு லட்சம் இந்திய ரூபா, வி.சி.க. சார்பில் 50 ஆயிரம் இந்திய ரூபா என பல்வேறு கட்சிகள் சார்பில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

இதேபோல, த.வெ.க. சார்பில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 20 லட்சம் இந்திய ரூபா நிவாரணம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை த.வெ.க. தலைவர் விஜய் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, நிவாரண உதவியை வழங்குவார் என எதிர்பார்க்கப்பட்டது.

இதற்காக, கரூரில் உள்ள ஒரு திருமண மண்டபத்துக்கு பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை வரவழைத்து, அங்கு அவர்களுக்கு விஜய் நிவாரண உதவிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், இடம் தேர்வு செய்வதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக விஜய் வருகை தள்ளிப்போவதாக கூறப்பட்டது.

இந்நிலையில், கரூர் மாவட்டத்தில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 31 பேர் உயிரிழந்த நிலையில், 27 பேரின் வங்கிக் கணக்குகளிலும் கடந்த சனிக்கிழமை த.வெ.க. சார்பில் தலா 20 லட்சம் இந்திய ரூபா வரவு வைக்கப்பட்டுள்ளது.

அதற்கான குறுஞ்செய்தி அவர்களது கையடக்க தொலைபேசிகளுக்கு வந்துள்ளது. இதேபோல, இங்கு உயிரிழந்த மேலும் 10 பேரின் குடும்பத்தினருக்கும் த.வெ.க. சார்பில் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்திருந்தாலும், அந்தக் குடும்பத்துக்கு ரூ.20 லட்சம் மட்டும் நிவாரணம் வழங்கப்பட்டதாகவும் த.வெ.க தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக கரூரில் தனது 2 மகள்களை பறிக்கொடுத்த வேலுசாமிபுரம் செல்வராணி கூறும்போது, “த.வெ.கவினர் வங்கிக் கணக்கு விவரங்களை வாங்கியிருந்த நிலையில் இன்று வங்கிக் கணக்கில் 20 லட்சம் இந்திய ரூபா வரவு வைக்கப்பட்டதற்கான குறுந்தகவல் வந்தது.” என்றார்.



# த.வெ.க சார்பில் தீபாவளி கொண்டாட வேண்டாம்

## தொண்டர்களுக்கு அறிவுறுத்தல்

கரூர் துக்க சம்பவத்தையொட்டி, த.வெ.க. கட்சி சார்பில் தீபாவளியை கொண்டாட வேண்டாம் என தொண்டர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கரூரில் நடந்த த.வெ.க. பிரசாரக் கூட்டத்தின் போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இச்சம்பவம் தேசிய அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்தச் சூழலில், தற்போது, த.வெ.க. கட்சி சார்பில் தீபாவளியை கொண்டாட வேண்டாம் என தொண்டர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து தவெக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் லயோலா மணி தனது எக்ஸ் தளத்தில்,

“கரூரில் நிகழ்ந்த எதிர்பாராத சம்பவத்தால் நம்மைவிட்டுப் பிரிந்த நம் சொந்தங்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், த.வெ.க. தலைவர் விஜய்யின் அறிவுறுத்தலின்படி, இந்த ஆண்டு கழகத்தின் சார்பில் யாரும் தீபாவளிப் பண்டிகையை கொண்டாட வேண்டாம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# பிஹார் தேர்தலில் ஜே.எம்.எம். 6 இடங்களில் தனித்துப் போட்டி

## மகா கூட்டணியில் பிளவு



பிஹார் சட்டப்பேரவை தேர்தலில் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சி, மகா கூட்டணியில் இருந்து வெளியேறி 6 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட உள்ளதாக அறிவித்துள்ளது.

243 உறுப்பினர்களை கொண்ட பிஹார் சட்டப்பேரவையில் உள்ள 121 தொகுதிகளுக்கு நவம்பர் 6 ஆம் திகதியும், 122 தொகுதிகளுக்கு நவம்பர் 11 ஆம் திகதியும் இரு கட்டங்களாக தேர்தல் நடைபெறுகிறது. முடிவுகள் நவம்பர் 14ஆம் திகதி அறிவிக்கப்படும். இதில் முதல்கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைந்தது. ஆனாலும், இப்போது வரை மகா கூட்டணியில் தொகுதிப் பங்கீடு இறுதியாகவில்லை.

மகா கூட்டணியில் ஆர்.ஜே.டி, காங்கிரஸ், சி.பி.ஐ (எம் எல்), வி.ஐ.பி கட்சி, சி.பி.ஐ, சி.பி.எம், ஜே.எம்.எம் ஆகிய கட்சிகள் இடம்பெற்றிருந்தன. இதில் எந்தக் கட்சி எந்த தொகுதியில் போட்டியிடும் என்பது உறுதியாகாத காரணத்தால், 8 தொகுதிகளில் மகா கூட்டணி கட்சிகள் தங்களுக்கு இடையிலேயே போட்டியிடும் சூழல் உருவாகியுள்ளன. இந்தச் சூழலில், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சி, மகா கூட்டணியில் இருந்து வெளியேறி 6 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட உள்ளதாக அறிவித்துள்ளது.

இதுகுறித்து ஜே.எம்.எம். பொதுச் செயலாளரும், செய்தித் தொடர்பாளருமான சுப்ரியோ பட்டாச்சார்யா, “எங்கள் கட்சி பிஹார் தேர்தலில் தனித்து ஆறு இடங்களில் தனித்து போட்டியிடும். தம்தாஹா, சாகாய், கட்டோரியா, மணிஹரி, ஜமுய் மற்றும் பிர்பைன்டி ஆகிய தொகுதிகளில் நாங்கள் போட்டியிடுவோம். எல்லா இடங்களிலும் நிலைமை மாறிவிட்டது. இப்போது காங்கிரஸ் ஏன் ஆர்.ஜே.டிக்கு எதிராக போட்டியிடுகிறது? இந்திய கொம்யூனிஸ்ட் ஏன் வி.ஐ.பி கட்சிக்கு எதிராக போட்டியிடுகிறது? தேர்தல் உத்திகள் மாறுகின்றன” என்று அவர் கூறினார்.




# பங்காளதேஷ் டாக்கா விமான நிலையத்தில் பாரிய தீ விபத்து; விமான சேவைகள் ரத்து

நாளாந்தம் நூற்றுக்கணக்கான விமான சேவைகள் முன்னெடுக்கப்படுகின்ற பங்களாதேஷ் தலைநகர் டாக்காவிலுள்ள சர்வதேச விமான நிலையத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

பங்காளதேஷ் டாக்கா ஹஸ்ரத் ஷாஜலால் சர்வதேச விமான நிலையத்தில் நேற்று பிற்பகல் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

விமான நிலையத்தின் சரக்கு முனையத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக விமான நிலைய முகாமைத்துவ பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

இதேவேளை தீ விபத்தினை தொடர்ந்து விமான நிலையத்தில் விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதுடன் டாக்கா விமான நிலையத்திற்கு வரவிருந்த விமானங்கள் ஏனைய நகரங்களுக்கு திருப்பிவிடப்பட்டுள்ளன.

அத்துடன் டாக்காவில் இருந்து புறப்படவிருந்த விமானங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதன்காரணமாக பயணிகள் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

தீ விபத்தில் ஏற்பட்ட சேதவிபரங்கள் தொடர்பாக இதுவரை தகவல் வெளியாகவில்லை என்பதுடன் தீயணைப்பு மற்றும் மீட்புக்குழுவினர் தீயை அணைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.







# இன்றைய ராசி பலன்கள் - 19.10.2025




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். சில விஷயங்களில் விட்டுக்கொடுத்து செல்வது கூட உங்களுக்கு மன உளைச்சலைத் தரும்.

இன்று பணிகள் கடினமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. தவறுகள் நேராமல் இருப்பதற்கு சிறிது கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் சில ஈகோ பிரச்சினைகளை சந்திக்க நேரும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.

வீட்டை பராமரிக்கும் அல்லது புதுப்பிக்கும் வகையில் செலவினங்கள் ஏற்படலாம். தேவையற்ற செலவுகளும் ஏற்படலாம்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.




இன்று உங்கள் வளர்ச்சிக்கு உகந்த நாள். மகிழ்ச்சியான புது அனுபவங்கள் உங்களுக்கு காத்திருக்கின்றது.

பணியில் காணப்படும் வளர்ச்சி உங்களை மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் வைத்திருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பேசுவதற்கான நேரம். இதனால் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க முடியும்.

இன்று நீங்கள் விரும்பும் வகையில் பணம் செலவு செய்யும் அளவில் சுதந்திரம் காணப்படும். நீங்கள் பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

அமைதியான அணுகுமுறையை மேற்கொள்ளவும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




ஆன்மீகம் சம்பந்தப்பட்ட பயணங்களுக்கு இன்றைய நாள் சிறந்தது. உங்கள் வளர்ச்சி குறித்து கவலைப்படுவ–ீர்கள். பொறுமையாக இருப்பதன் மூலம் நீங்கள் நினைத்தது நடக்கும்.

பணியிடத்தில் சில மன உளைச்சல்கள் காணப்படும். பணியில் கூடுகள் சுமைகளை சுமக்க நேரும்.

உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை கவனமாக பகிர்ந்து கொள்ளுங்கள். இன்று அமைதியாகவும் பொறுமையாகவும் இருப்பது நல்லது.

இன்று நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் தந்தையின் உடல் நலம் குறித்த செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று உணர்ச்சிவசப்படுவீர்கள். பாதுகாப்பற்ற உணர்வு காணப்படும். இன்றைய நாள் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. உங்கள் வளர்ச்சி பற்றி கவலைப்படுவீர்கள்.

பணிகளைக் கையாளும் போது பொறுமை இழப்பீர்கள். இதனால் தவறுகள் ஏற்படும். எனவே கவனமாக பணியாற்றவும்.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது நல்லது.

பணத்திற்கான சிக்கல்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. கடன்கள் ஏற்படும் வாய்ப்பும் அதிகமாக காணப்படுகின்றது.




நீங்கள் கடினமாக உழைத்து பலனை எதிர்பார்க்க வேண்டும். பாடல்கள் கேட்பது திரைப்படம் பார்ப்பது போன்றவற்றின் மூலம் அமைதியடையுங்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடனான தகவல் பரிமாற்றத்தில் தடைகள் ஏற்படும். நீங்கள் இதனை கவனமாகக் கையாள வேண்டும்.

பண இழப்பிற்கான வாய்ப்பு காணப்படுகின்றது. இதனை கண்காணிக்க வேண்டியது அவசியம்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.கால் வலி மற்றும் தோல் எரிச்சல் போன்ற பாதிப்புகளால் அவதிப்படுவீர்கள்.




இன்று நீங்கள் புதியதொரு வளர்ச்சியை நோக்கி முன்னேறுவீர்கள். சிறப்பாக திட்டமிடுதல் மற்றும் தொழில் சார்ந்த அணுகுமுறை மூலம் வெற்றி காணலாம்.

பணியில் பெயரையும் புகழையும் சம்பாதிப்பீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அன்பை வெளிப்படுத்தி மகிழ சாத்தியம் உள்ளது. இதனால் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் வாய்ப்புள்ளது.

பண வரவு அதிகமாக காணப்படுகின்றது. உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று பயணங்கள் காணப்படுகின்றன. யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இசை விழாக்களில் பங்கு கொள்வது ஆறுதலைத் தரும்.

முறையான திட்டமிட்டு நேரத்தோடு செயல்பட்டால் எளிதாக பணியாற்றலாம்.

உறவில் கோபதாபங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையிடம் கவனமாகப் பழகுங்கள்.

பணபுழக்கம் மகிழ்ச்சிகரமானதாக காணப்படாது. இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.




உங்கள் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் கண்காணிக்க வேண்டும். நேர்மறையான அணுகுமுறை வெற்றியை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இன்று பனியின் போது சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். மேலதிகாரிகள் ஆதரவு அவ்வளவாக காணப்படாது.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் கவனமாக வெளிப்படுத்துங்கள்.

பணப்புழக்கம் இன்று குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் உங்களை வருத்தத்திற்குள்ளாக்கும்

மன உளைச்சல் காரணமாக ஆரோக்கிய பாதிப்பு ஏற்படும். தூக்கமின்மை காணப்படும். தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.10.2025




இன்று சில சவால்களை சந்திக்க நேரும். என்றாலும் அதுவும் உங்களுக்கு நல்லது.

இன்று பணிகளைக் கையாளும் போது கவனம் தேவை. இன்று பணிச் சுமை காணப்படும். நீங்கள் அதனை சாமர்த்தியமாகக் கையாள வேண்டும்.

உங்கள் உறவில் பாதுகாப்பற்ற உணர்வு காணப்படும். இதனை சரி செய்தால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

நிதியைப் பொறுத்தவரை ஏற்றத்தாழ்வு காணப்படும். பணத்தைக் கையாளும்போது கவனம் தேவை.

இன்று குளிர்ந்த உணவுகளை தவிர்க்க வேண்டும்.




இன்றைய நாளை உங்கள் சுய வளர்ச்சிக்கு பயன்படுத்தலாம். நேர்மையான முயற்சிகளால் விரும்பும் பலன்களை அடையலாம்.

பணியிடத்தில் நல்ல வளர்ச்சி காணப்படும். உங்கள் முயற்சியின் மூலம் நல்ல பெயரையும் புகழையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவை பராமரிப்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

உங்களின் செலவிற்கான பணம்உங்களுக்கு கிடைக்கும். மங்களகரமான நிகழ்சிகளுக்கு பணம் செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தலைவலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




உங்கள் முயற்சியும் தன்னம்பிக்கையும் வெற்றியையும் மகிழ்ச்சியையும் அளிக்கும்.

இன்று அதிர்ஷ்டம் உங்களைப் பார்த்து புன்னகை பூக்கும். உங்கள் முயற்சிகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

குடும்பத்தில் அன்பு மிகுந்து காணப்படும். உங்கள் துணையுடன் ஒற்றுமையாக பகிர்ந்து மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலை சுதந்திரமாக காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாகக் காணப்படும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். அமைதியுடனும் தன்னம்பிக்கையுடனும் இருங்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி குறைந்து காணப்படும். பணிகளைக் கையாளும் போது கவனம் தேவை.

நீங்கள் சிறிது குழம்பி காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். இதனால் உறவில் சில அசௌகரியங்கள் ஏற்படும்.

இன்று பண வரவுக்குச் சாதகமான நாள் அல்ல. இன்று பணம் குறைந்த அளவில் காணப்படும்.

ஜீரணம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது.

# வவுனியாவில் மாணவர்களை கௌரவித்த ரிஷாத்










(கி.வசந்தன்)

வவுனியா மாவட்டத்தில் உயர்தர பரீட்சையில் அதி விசேட சித்திகளைப் பெற்றவர்கள் மற்றும் சாதாரண தர பரீட்சையில் அதி விசேட சித்திகளை பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று வவுனியா மாநகர சபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது 165 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். கடந்த முறை மருத்துவ பீடம், பொறியியல் பீடம் உட்பட முதல் நிலையில் பல்கலைக் கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் இதன் போது கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுர்தீன், முத்து முகமது, ப. சத்தியலிங்கம் மற்றும் உள்ளூராட்சி மன்ற தலைவர்கள், பிரதித் தலைவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.